Registered as a news paper.

பக்கங்கள்: பத்து


விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 29 (28.08.2003) வியாழக்கிழமை இதழ்: 328

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம் கோ
(சி-1295)




பாரிஸில் நேற்றுமுன்தினம் தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை, நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## சிப்பாய் மரணம்!

தென்மராட்சி, நுணாவில் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் மர்மமான முறையில் நேற்றுமுன்தினம் மரணமானார்.

பன்னிரண்டாவது விஜயபாகு படையணியைச் சேர்ந்த சிப்பாயான நிகால் ரணவீர (வயது 28) என்பவரே, உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பிரேம்சங்கருக்கு பொலிஸார் தெரிவித்ததையடுத்து, இது தொடர்பான மரணவிசாரணையை நீதிவான் மேற்கொண்டார்.

சிப்பாய் எவ்வாறு இறந்தார் என்பது பற்றி மருத்துவ பரிசோதனையை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியை மேற்கொள்ளுமாறும், பின்னர் சடலத்தினை உறவினர்களிடம் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு நீதிவான் பணித்தார். (202)

## ஜே.வி.பியின் பாதயாத்திரை இன்றுடன் நிறைவுபெறும்

(கொழும்பு)

புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை வழங்குவதற்கும், இலங்கைப் பிரச்சினையில் வெளிநாட்டின் இராணுவம் தலையிடுவதற்கும், எதிர்ப்புத் தெரிவித்து, மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்துள்ள எதிர்ப்புப் பேரணி - நேற்று மூன்றாவது நாளாகவும் நடைபெற்றது.

காலியில் இருந்து கொழும்பு வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பாத யாத்திரை, 3 ஆம் கட்டமாக நேற்று அளுத்கமையிலிருந்து பாணந்துறை வரை நடைபெற்றது.

அளுத்கமையில் நேற்று மூன்றாம் நாள் பாதயாத்திரை நிறைவுற்ற பின்னர், அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் மக்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக சபை

# நிரந்தரமான தீர்வு அல்ல

# ஒரு படிநிலை வளர்ச்சியே!

## செயற்பாட்டாளர் மத்தியில் தமிழ்ச்செல்வன்

(பாரிஸ்)

**இடைக்கால நிர்வாகம் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வல்ல. ஒரு படிநிலை வளர்ச்சியே. சிங்கள அரசு மூன்றாவது தடவையாகவும் வெறும் 'கோதை' எமக்கு காட்டியபோது - எமது தேசியத்தலைவர் இடைக்கால திட்ட வரைபை நிராகரிக்கத் தேவையில்லை. எமது ஆலோசனையை முன்வைப்போம் என்றார். அதன்படியே, திட்டவரைபு குறித்து இங்கு ஆராய்ந்து வருகிறோம்" என பிரான்சில் நடைபெற்ற தமிழ் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -**

சிங்கள அரசு எமது இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் ஆர்வத்துடன் இல்லை.

பிரான்ஸ் தமிழ் அறிஞர்களும், தமிழீழ மக்களும் ஒன்றுகூடி தமிழர் தேசத்துக்கான உள்ளகக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருக்கின்றோம். இது விடுதலைப் போராட்ட வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கதொரு நிலையாகும்.

விடுதலைப் புலிகள் முன்வைக்கவுள்ள வரைபு குறித்து, சந்திரிகா பதற்றமடைந்து கொண்டிருக்கின்றார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# உறக்கத்திலிருந்த பெண்ணை வல்லுறவுக்குட்படுத்த முயற்சி!

## பொலிஸாரால் 3 சிப்பாய்கள் கைது

இரவு வேளை - வீட்டில் உறக்கத்திலிருந்த குடும்பப் பெண்ணை, பாலியல் பலாத்தகாரத்திற்குட்படுத்த, இராணுவ சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட முயற்சி, அந்த பெண்ணினால் முறியடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் மூன்று சிப்பாய்களை - இராணுவப் பொலிஸார் கைதுசெய்து, விசாரணைக்குட்பத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில், பருத்தித்துறை - இன்பருட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவதினமிரவு கணவன் கடற்தொழிலுக்குச் சென்றவேளை - மேற்படி பெண் வீட்டில் தனிமையில் உறக்கத்திலிருந்தார். கரையோரப் பாதுகாப்பில் இருந்த இராணுவச் சிப்பாய், வீட்டினுள் நுழைந்து,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் பிரதமரிடம் வலியுறுத்தினர்!

கிழக்கின் பாதுகாப்பு குறித்து, மேலும் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என, வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியபோது - இவ்வாறு வலியுறுத்தப்பட்டதாக, அரச ஊடகப் பேச்சாளர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் முன்வைக்கும் வரைபை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும்!

## பிரான்ஸில் கேணல் கருணா தெரிவிப்பு

(பாரிஸ்)

இந்தநாள் மறக்கமுடியாதநாள். ஆறாவது கட்டப் பேச்சுகளைக் கட்டம் கட்டமாக கடந்துவிட்டநிலையில், இந்தப் பேச்சுவார்த்தை தொடருமா என்ற அச்ச உணர்வு தோன்றியிருக்கிறது. போர் வெடிக்குமா? போர் தொடங்கப்போவது போல் இருப்பதாக மக்கள் கதைக்கிறார்கள். கடந்தகால அனுபவங்கள் அவர்களுக்கு அந்த எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது.

- இவ்வாறு பிரான்ஸில் நடந்த தமிழ் செயற்பாட்டாளர் சந்திப்பில்- புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை எனப்போகின்றபோக்கு - இந்தப் போராட்ட வரலாற்றில் போர்நிறுத்தம் வெளிநாட்டு அனுசரணையுடன், வெளிநாட்டு யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்களுடன் நின்றுகொண்டு இம்முறை பலமாக நடந்துகொண்டிருக்கின்றது, என அவர் மேலும் தெரிவித்தார்.

பிரெஞ்சு அரசின் ஆதரவுடன், பிரெஞ்சு மண்ணில் நடக்கின்ற இந்தக் கலந்துரையாடல், இன்னும் நம்பிக்கையை அளித்திருக்கின்றது. இந்தச் சந்திப்பில் - சட்டவல்லுனர்கள், அரசியல் தத்துவஞானிகள் கலந்துகொண்டிருக்கிறார்கள். நாம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இந்தியாவுடனும் கலந்துரையாடல்

விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவுள்ள, வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக, இந்திய அரசுடன் இலங்கை அரசாங்கம் கலந்துரையாடும்.

- இவ்வாறு மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவீத்தார்.

இலங்கையின் அயல்நாடான இந்தியாவை ஒதுக்கிவிட்டு, அரசு எந்தவொரு தீர்வையும் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யாது என அவர் கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரங்களைக் கையில் எடுத்து சட்டம், ஒழுங்கை காக்கவேண்டும்!

## ஜனாதிபதியிடம் பிக்குகள் கோரிக்கை

ஜனாதிபதிக்கும், தேசிய சங்க சம்மேளனத்திற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் நாடு ஆபத்தான நிலையில் செல்வதாகவும், பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அக்கறையோடு செயற்படவேண்டும் எனவும், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை கொடுத்தால், அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்றும், தேசிய சங்க சம்மேளனத்தினர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
விஜயகாந், கிரண் விவேக் நடித்த
தென்னவன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
நாளை முதல்
பாய்ஸ்



(சி-1284)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று மட்டும்
ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
THE PEACE KEEPER
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
நாளை முதல் சரத்குமார், சிம்ரன் நடித்த
அரசு
(சி-1285)

**முதலாம் ஆண்டு நிறைவையொட்டி**

நமது **ஈழநாடு**
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

**நிபந்தனைகள்**

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக் கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

## மின்சாரத் தடையால் மக்கள் பாதிப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கான மின் விநியோகம், கடந்த ஒரு வாரகால மாக தடைப்பட்டுள்ளதாக - மின்பா வனையாளர்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

இந்தப்பகுதி மின்சார விநியோ கத்திற்காகப் பயன்படுத்தப்படும் மின் பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதாலேயே, மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இந்த மின்பிறப்பாக்கியை திருத் தும் பணியில் மின்சாரசபை ஊழியர் கள் ஈடுபட்டுள்ளதாகவும், திருத்த வேலைமுடிந்தவுடன் - இந்தப் பகுதிக் கான மின்சாரம் வழங்கப்படுமென வும், மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## நன்னீர்க் கிணறு புனரமைப்பு

(மட்டுவில்)

ஏ-9 பிரதான வீதியோரமாக, நாவற்குழிச் சந்திக்கு அண்மையிலி ருந்த நன்னீர்க்கிணறு ஒன்று, பட்டி னிக்கெதிரான நிறுவனத்தினால்- புன ரமைக்கப்பட்டுள்ளது. கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது, முற்றாகச் சேதமடைந்திருந்த மேற்படி கிணறு- தற்போது புனரமைக்கப்பட்டு புதுமெருகுடன் விளங்குகின்றது. இதனால், இப்பகுதி வாழ்மக்களும், வர்த்தகர்களும், பாதசாரிகளும் பெரும் நன்மையடைந்துள்ளனர்.(24)

## கரவெட்டியில் கோழிகளுக்கு தடுப்புமருந்து பெறலாம்!

கரவெட்டி அரச கால்நடை வைத் தியசாலையில் - கோழிகளுக்கான தடுப்புமருந்துகள், எதிர்வரும் வாரத் திலிருந்து வழங்கப்படவுள்ளன.

வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழ மைகளிலும், அலுவலக நேரத்தில் இந்த மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி பிரதேசத்தில் கோழி வளர்போருக்கு வசதியாக, மேற்படி வைத்தியசாலையில் வைத்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (116)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாளை!

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் - நாளை காலை 10 மணிக்கு, செய லக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

தொடர்ந்து அன்றையதினம் விவசாயக்குழுக் கூட்டமும், இடம் பெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியாளருக்கு இரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை

### யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாகக் கசிப்பு உற் பத்திசெய்து விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கு - இரண்டு வருட கடூ ழிய சிறைத்தண்டனையை வழங்க, யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக் னராஜா உத்தரவிட்டார்.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனைசெய்தார் என்ற, குற்றச்சாட்டின் பேரில் யாழ். ஆஸ் பத்திரி வீதியைச் சேர்ந்த குடும்பஸ் தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு- நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்டார்.

மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான், இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை யும், ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பண மும் செலுத்துமாறு உத்தரவிட்டார். தண்டப்பணம் செலுத்தத் தவறின், மேலதிகமாக ஒரு வருடம் சிறைத் தண்டனை வழங்கப்படுமெனவும் தீர்ப்பளித்தார்.


இதேவேளை, மேற்படி நபர் முன்பு ஒருமுறையும் கசிப்பு உற் பத்திசெய்து - விற்பனைசெய்த குற் றத்துக்காக யாழ்.நீதிமன்றத்திற்கு இருபதினாயிரம் ரூபா .செலுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வியாபாரிகள் முன்னனுமதி பெறவும்

(மல்லாகம்)

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் - உணவுப்பொருள் விற்ப னையில் ஈடுபடும் வர்த்தகர்கள் அதற் குரிய முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு, வலி.வடக்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (68)

## மணவிழாக் காணநல்லை வாரும்



நம்தமிழர் அரசாண்ட நலம்பெருகும் நல்லூரில்
முருகன்திருக் கல்யாணம் இன்று!

★ ★ ★

நல்லூரில் நடக்கின்ற கல்யாண விழாக்காண
எல்லோரும் வாருங்கள் கூடி!

★ ★ ★

சித்தர்களும் யோகியரும் நடம்பயின்ற நல்லூரில்
மணவிழாக் காணவுடன் வாரும்!

★ ★ ★

வேதியரின் மறையோசை வானெங்கும் எதிரொலிக்கும்
கல்யாணம் காணவங்கு வாரும்!

★ ★ ★

நாதஸ்வர இசையொலிக்கத் தவிலினிசை பரந்தொலிக்கும்
மணவிழாக் கண்டிடவே வாரும்!

★ ★ ★

பக்தர்களின் மகிழ்ச்சியலை விண்வரைக்கும் சென்றுவரும்
கல்யாணம் பார்த்திடவே சேரும்!

★ ★ ★

மாலைகளும் மின்விளக்கும் அழகூட்டும் மண்டபத்தில்
மணவிழாக் காணவங்கே கூடும்!

★ ★ ★

உமாபதியின் திருமகனாம் முருகேசன் குஞ்சரிக்கு
மாலையிடும் எழில்காண வாரும்!

★ ★ ★

வானவரின் குறைதீர்த்து இந்திரனின் குலமணிக்கு
மாலைசூடும் எழில்காணச் சேரும்!

★ ★ ★

ஆடல்பல செய்துகுறக் குலமகளின் கரம்பற்றும்
கடம்பனனெழில் காணவுடன் வாரும்!

★ ★ ★

குறமகளை முருகையன் காதல்பொங்க மாலையிடும்
மணக்கோலம் பார்க்கவுடன் வாரும்!

★ ★ ★

குறவள்ளி குஞ்சரியுடன் முருகேசன் ஊஞ்சலிலே
அமர்ந்தாடும் எழில்காண வாரும்!

★ ★ ★

திருவூஞ்சற் பாட்டிசைக்க நாதஸ்வரம் ஏற்றிசைக்க
ஊஞ்சலாடும் எழில்காணச் சேரும்!

★ ★ ★

மலர்களுடன் மின்விளக்கால் எழில்சேர்க்கும் பல்லக்கில்
முருகனுலா வருமெழிலைப் பாரும்!

★ ★ ★

மணமிழந்த எம்வாழ்வு மண்மேலே மணம்பரப்ப
அருளும்குகன் விழாக்காண வாரும்!

★ ★ ★

திருமுருகன் மணக்கோலம் தருமின்பம் பேரின்பம்!
அருட்கோலம் காணநல்லை வாரும்!

★ ★ ★

கண்ணாயிரம் கொண்டு காலமெல்லாம் பார்த்தாலும்
கந்தனெழில் பேரின்பம்தான்!

*வயலூர் முருகன்*

## "என்றும் அருள்வான் அவனன்றோ"

ஆற்றங் கரையில் அமர்ந்திருக்கும்
அப்பன் முருகன் சந்நிதிக்கு
நாற்றிசை இருந்தும் பக்தர்கள்
நாடி வருவார் தினங்கூடி
போற்றி அவன்திருப் பாதங்களை
பணிந்தே நமது நேர்த்திகளை
ஏற்றிப் போற்றும் அவர்களுக்கு
என்றும் அருள்வான் அவனன்றோ!

அரியாலையூர் சிவதாசன்

**சுலபமாக - சொகுசாக - சிக்கனமாக**

**சிங்கப்பூர் சுற்றுலா**



**யாழ்ப்பாணத்திலிருந்து ஒருநாளில் சிங்கப்பூர்**




- 31.08.2003 இல் எக்ஸ்போ எயர் விமானம்மூலம் இரத்மலானை செல்ல, 01.09.2003 இல் SQ 401 மூலம் 1.35 மணிக்கு சிங்கப்பூர் செல்ல.
- யாழ்ப்பாணம் - இரத்மலானை - கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் இலவச தொடர்பு கட்டுநாயக்கா - கட்டுநாயக்கா - இரத்மலானை - யாழ்ப்பாணம்
- சிங்கப்பூர் - தங்கும் - SUMMERVIEW HOTEL - சிங்கப்பூர் இலவச போக்குவரத்து
- SUMMERVIEW HOTEL 3 நாள் இலவச தங்குமிடவசதி. (ஒருஅறை- பதிவுவேண்டும் - இருவர்/மூவர்) காலை உணவு இலவசம்.

04.09.2003 - சிங்கப்பூர் விமான நிலையம் - 19.00 மணி
05.09.2003 - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் எக்ஸ்போ எயர்மூலம் மு.ப. 11.45 மணிக்கு பலாலி விமான நிலையம்.

*இத்தனை வசதிகளுடனும் கூடிய உல்லாசப்பயணம் செய்வதற்கு*

**போக்குவரத்துக் கட்டணம்**

- ரூபா 45, 000 (ஒருவருக்கு)
- ரூபா 30, 000 (சிறுவர்களுக்குத் தனிப்படுக்கை இல்லை)
- ரூபா 37, 000 (சிறுவர்களுக்குத் தனிப்படுக்கை வசதி)

*சிங்காரச் சீமையிலே சொர்க்கம் போன்ற அழகுமிகு இடங்களுக்குச் சுற்றுலா செல்ல வசதிகள் செய்து தரப்படும். இவற்றுக்குரிய கொடுப்பனவுகளை நீங்களே செய்யவேண்டும்.*

இனி ஏன் தயக்கம்? சகல விபரங்பகளுக்கும் உடனே தொடர்பு கொள்ளவும்.

**COS MOS MARKETING SERVICES**
**200, K.K.S. ROAD,**
**JAFFNA.**
**T.P. 222 - 5461**

(சி-1414)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு 17 ஆயிரம் மில்லியன் ரூபா!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

18 மாதங்களுக்குள், 17 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவிலான அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக - நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் - 'சமாதானத்தில் உங்களுடைய பங்கு' என்ற பெயரிலான, ஊடகவியலாளர்களுக்கான மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே, ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி அபிவிருத்தித் திட்டங்களில், தற்போது 63 வீதமான மக்களுக்கு மின்சார வசதிகள் கிடைக்கின்றன. 72 வீதமான மக்களுக்கு மின்சாரம் கிடைக்க முயற்சி எடுக்கப்படும்.

வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கப்படவுள்ளன. 17 ஆயிரத்து 500 ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக - மாத்தளை, பொலநறுவை முதலிய இடங்களில் ஆடைத்தொழிற்சாலைகள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணம், தென்மாகாணங்களில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களுக்கு சீனா, குவைத், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன திறைசேரிக்குப் பெருமளவு நிதியை வழங்க முன்வந்துள்ளன.

இவ்வாறு ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# மட்டு - தேனகம் விடுதியில் ஜி.ரி.இசற் பிரதிநிதிகள் புலிகளுடன் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

ஜி.ரி.இசற் எனும், ஜேர்மனை மையமாக வைத்து இயங்கும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் - நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு, கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதியில், கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பிரபா, புனர்வாழ்வுப் பொறுப்பாளர் துரை, பொருண்மியப் பொறுப்பாளர் நிசாம், - கல்விப் பொறுப்பாளர் வரதன், வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, ஜி.ரி.இசற் பிரதிநிதிகளான எவகட் வோவர், மெலானி (நிகழ்ச்சித் திட்ட அதிகாரி), கிறிஸ்ரியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆங்கிலமொழிக் கல்வியை அமுல்படுத்த நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை!

## ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கொண்டுவந்தார்

அரசாங்கப் பாடசாலைகளில் - முதலாம் வகுப்புமுதல், ஆங்கில மொழிக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கான விசேட திட்டம் ஒன்று, ஆரம்பிக்கப்படவேண்டும் என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அரசாங்கப் பாடசாலைகளில், ஆங்கிலமொழிக் கல்வியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று, நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில்

இலங்கையில் - ஆங்கிலமொழிப் புலமை, மாணவர்கள் மத்தியில் வெகு குறைவாகவே உள்ளது. இதனால், நாட்டின் கல்வித்துறையில் நெருக்கடிநிலை தோன்ற வாய்ப்புண்டு.

இலங்கையின் பொருளாதாரம் தனியார் துறையில் தங்கியிருக்கும் நிலை தோன்றியுள்ளதால், ஆங்கிலம் தெரியாதவர்கள் தனிமைப்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

அரசாங்கப் பாடசாலைகளில் - தமிழும், சிங்களமுமே தாய்மொழியாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதனால், ஆங்கிலமொழிப் புலமையற்றவர்களாக மாணவர்கள் உள்ளனர்.

புலம்பெயர்ந்து தொழில்வாய்ப்புப் பெற்றுச்செல்லும் நபர்களுக்கு, ஆங்கிலமொழி அடிப்படைத் தகுதியாக உள்ளது. எனவே, அரசாங்கப் பாடசாலைகளில் - ஆண்டு ஒன்று முதல் ஆங்கிலமொழிக் கல்வியை அறிமுகப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுவரொட்டிகளை ஒட்டிய இருவர் பொலிஸாரினால் தாக்கப்பட்டனர்!

அம்பாறையில் - சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள், பொலீஸாரால் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண பொதுமக்கள் அமைப்பின் உறுப்பினர்களே, மேற்படி தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரியவருகின்றது.

இளைஞர்களை - சுவரொட்டிகளை ஒட்டிய சம்பவத்திற்காகத் தாக்கிய பொலிஸாரின் நடவடிக்கையானது, ஜனநாயக விரோத செயல் எனக்கூறிய கிழக்கு மாகாண பொதுமக்கள் அமைப்பு, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினையும் செய்துள்ளது.

# தமிழின உயிர்க்கொலைகள் தினம் அடுத்த மாதம் அனுஷ்டிக்க ஏற்பாடு!

கடந்த இரு தசாப்தங்களாக - சிங்கள இராணுவத்தினரால்- மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் 05 ஆம் திகதியை - தமிழின உயிர்க்கொலைகள் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், வருடாவருடம் செப்ரெம்பர் 05 ஆம் திகதி - இந்த நாள் துக்கதினமாகவும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நாளில் - பொது இடங்கள், காரியாலயங்கள் என்பவற்றில் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்படும் எனவும், ஆலயங்களில் - அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு, மணி ஓசை ஒலிக்கப்பட்டு விசேட பூசை இடம்பெறும்.

அத்துடன் - பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், காரியாலய ஊழியர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்துகொண்டு, தமது கடமைகளில் ஈடுபட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

முக்கிய நிகழ்வாக - படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக, கிழக்குப் பல்கலைக்கழகத்தில்- நினைவுத்தூபிக்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு - திருப்பெருந்துறையில் மூன்று நாள்களாக நடந்த மக்கள் எழுச்சிச் சங்கமம்!

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியற்துறையினர் - கடந்த 23 ஆம் திகதிமுதல் 25 ஆம் திகிவரை, மூன்று தினங்களும், திருப்பெருந்துறைக் கிராமத்தில், மக்கள் எழுச்சி சங்கமம் என்னும் நிகழ்ச்சியை நடத்தினர்.

தமிழீழ விடுதலைப்புலிகளும், அரச குழுவாக நிர்வாகமும், திருப்பெருந்துறை மக்களும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தினர்.

இதன் இறுதிநாள் நிகழ்வு - நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பிரேமினி உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# எழுபது வீதமான அரச ஊழியர் லஞ்ச, ஊழல், மோசடிகளில்!

## விசாரணை ஆணையாளர் கூறுகிறார்

நாட்டில் எழுபது சதவீதமான அரச ஊழியர்கள் - லஞ்சம், ஊழல், மோசடிகளுடன் சம்பந்தப்பட்டுள்ளனர். லஞ்சம், ஊழல், மோசடிகள் தொடருமாயின், நாடு பொருளாதா ரீதியாக நலிவடையநேரிடும். மக்களும் - சட்டம், ஒழுங்கை மதியாத நிலை உருவாகும் என்று - லஞ்ச, ஊழல் முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பியசேன ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

எந்தவொரு நாட்டில் லஞ்சம், ஊழல் மோசடிகள் அதிகரிக்கின்றதோ, அந்த நாடு - சமூகரீதியாகவும், நிறுவனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நலிவடைந்து, மிகமோசமான பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்கநேரிடும்.

லஞ்சம், ஊழல், மோசடிகளை நடைமுறையில் இருந்து ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்த ஜப்பான், சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகளில் - மொத்தத் தேசிய வருமானம், தலா வருமானம் என்பன உச்சநிலையில் இருக்கின்றன.

உலகில் லஞ்சம், ஊழல், மோசடிகளை ஒழித்துக்கட்டுவதில் வெற்றி கண்ட நாடுகளின் பட்டியலில், முதலாவது இடத்தில் - பின்லாந்தும், அடுத்து டென்மார்க், ஜப்பான், சிங்கப்பூர், கொரியா ஆகிய நாடுகளும் இருக்கின்றன.

இந்த நாடுகள் - பொருளாதார ரீதியில் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளன. இந்த நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு கிடைத்திருப்பது 52 ஆவது இடமாகும்.

இதனால் - லஞ்சம், ஊழல், மோசடிகள் அதிகரிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தால், நாடு மிக மோசமான விளைவைச் சந்திக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## உலர் உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து, கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் வாழும் 67 குடும்பங்களுக்கான உலர் உணவு முத்திரையை - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையே வழங்கும். இதுவரை - உல் உணவு முத்திரையை, கரவெட்டிப் பிரதேச செயலகமே வழங்கிவந்தது.

இந்த உலர் உணவு முத்திரைகள், நாளை வெள்ளிக்கிழமை- புலோலி உபய கதிர்காமத்தில் இயங்கும் நாகர்கோயில் மேற்கு கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென, நாகர் கோயில் மேற்கு கிராம அலுவலகர் த.தர்மகுல சிங்கம் அறிவித்துள்ளார்.

(17)




இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசிய பிக்குகள் முன்னணியினர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய கூட்டம் மற்றும் பேரணியில் எடுக்கப்பட்ட படங்கள்.

# இந்திய மாநில முதல்வர்கள் குறித்த 'இந்தியா டுடே' கருத்துக் கணிப்பில் ஜெயலலிதாவுக்கே கடைசி இடம்!



(இந்தியா)

இந்தியாவில் உள்ள 19 மாநில முதலமைச்சர்கள் குறித்து- 'இந்தியா டுடே' நடத்திய கருத்துக் கணிப்பில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குக் கடைசி இடமே கிடைத்துள்ளது.

எதிர்வரும் நவம்பரில் - ஐந்து மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல்களை முன்னிட்டு, இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இரண்டு விதமான கருத்துக் கணிப்புக்கள் நடத்தப்பட்டதிலேயே, ஜெயலலிதாவுக்கு கடைசி இடம் கிடைத்துள்ளது.

மாநில முதலமைச்சர்களுக்கு, வாக்காளர்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்குக் குறித்து நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட் நன்றாகச் செயற்படுவதாக, 65 வீதமானோர் வாக்களித்தனர்.

ஆனால், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, 17ஆவது இடம் கிடைத்துள்ளது. இவரே கடைசி இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஊழியர் சங்கப் போராட்டத்திற்கு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும், போதனை சாரா ஊழியர்களின் சங்கங்கள் பலதரப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக நடத்திவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஏற்கனவே தமிழ் மாணவர்களின் கல்வி - பலதரப்பட்ட காரணங்களால் பாதிப்படைந்தவேளையில், இவ்வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதை கல்விச் சமூகத்துடன் தொடர்புடைய அனைவரும் மிகக்க கவனத்தில் எடுத்துக் கொள்ள வேணடும். குறிப்பாக - குறிப்பிட்ட நேரத்தில் பரீட்சைகள் நடைபெறாததினால் தமிழ் மாணவர்களின் கல்விக்கான காலநிலை நீடிக்கப்படுவதினால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படவுள்ளது.

எனவே - அரசும், அதனை சார்ந்தவர்களும் தொழிற்சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு காண்பதன்மூலம், போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு கோருகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் போதனை சாராத ஊழியர்கள் அணி திரண்டு ஒற்றுமையுடன் இப் போராட்டத்தை நடத்திவருவது பாராட்டக்கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிகிச்சைக்கு வந்த சிறுமியின் நகை யாழ். நகரில் வைத்து அபகரிப்பு

யாழ் .நகரப்பகுதியில் வைத்து - சிறுமி ஒருவரின் தோடு அபகரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகத் தாயாரோடு வந்த, ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த, சிறுமியே தோட்டைப் பறி கொடுத்தவராவார். தாயார் மருந்து பெறச்சென்றபோது, சிறுமி - தனியே வெளியே நின்றுள்ளார்.

இதை அவதானித்த இளைஞர் ஒருவர் - சிறுமியைத் தனியே அழைத்துச் சென்று, சைக்கிளில் ஏற்றிச்கொண்டு, சனநடமாட்டம் குறைந்த இடம் ஒன்றில் வைத்து, சிறுமியின் காதில் இருந்த தோடுகளை அபகரித்துள்ளார். ஒரு காதுத்தோடு - பிடுங்கி எடுக்கப்பட்டதில், சிறுமியின் காதில் காயம் ஏற்பட்டுள்ளது.

அநாதரவாக விடப்பட்ட, சிறுமியை - வர்த்தகர் ஒருவர் - யாழ். பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டி வந்தார். அங்கு சிறுமியைக் காணாமையால் முறைப்பாடு செய்யவந்த, பெற்றோரிடம் - சிறுமி ஒப்படைக்கப்பட்டார்.

இம்மாதிரியான சம்பவங்கள் - யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதிகளிலே அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் தேர் உற்சவத்தில் திருடர்களின் கைவரிசை!

நல்லூர் தேர்த்திருவிழா உற்சவத்தின்போது, ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான 80 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக - முறையிடப்பட்டுள்ளதுடன், இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 9 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நல்லூரில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது, பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர். இந்தப் பக்தர்களின் நெருக்கத்தினைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள், மேற்படி திருட்டுச் சம்பவத்தினை மேற்கொண்டுள்ளனர்.

தமது பொருட்களைப் பறிகொடுத்தவர்கள் செய்தமுறைப்பாட்டையடுத்து, பொலிஸாரால் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், இம்முறை நல்லூர் தேர் உற்சவத்திற்கு வருகை தந்த பக்தர்களின் எண்ணிக்கை கூடியிருந்ததால், இவற்றைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தி, திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

சென்றவருடத்தைவிட, இவ்வருடம் திருட்டுப்போன பொருட்களின் தொகையும் கூடுதலாக உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இளைஞர் தாக்குதலுக்குள்ளானார்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் இளைஞர் ஒருவர் மோசமானமுறையில் தாக்கப்பட்டுள்ளார். கராட்டி வகுப்பு ஒன்றில் ஏற்பட்ட தகறாறே, இத் தாக்குதலுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இத் தாக்குதலில் - குருநகரைச் சேர்ந்த மார்க் மக்ஸவலன் (வயது 25) என்பவரே காயடைந்தவர் ஆவார்.

இவரைத் தாக்கியதாகக் கூறப்படும் - மூன்று பேருக்கு எதிராக, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செயயப்பட்டுள்ளது.

## கழிவு வாய்க்கால்களில் துர்நாற்றம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள, கழிவு வாய்க்கால்களில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாகத் துப்பரவு செய்யப்படாமையினாலேயே, இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், ஆஸ்பத்திரிக் கழிவுகள் - தேங்கி நிற்பதால், தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த 'ஞானச்சுடர்' மலர் வெளியீட்டு விழா நாளை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மலருக்கான வெளியீட்டுரையை - சைவப்புலவர் சசிகலா கனகசுந்தரமபிள்ளை நிகழ்த்துவார். மதிப்பீட்டுரையை - ஓய்வுபெற்ற அதிபர் மங்கையற்கரசி சிற்றம்பலம் நிகழ்த்துவார்.

## மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி, பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கிடையில் நடாத்தப்படவுள்ள மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி - நாளை வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன், இன்று பி.ப 2 மணிக்கு முன்னர் - 165, மானிப்பாய் வீதியிலுள்ள ஜனசக்தி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## திலீபன் நினைவுத்தூபியை பெருமளவானோர் பார்வை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பின்வீதியில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட தியாகி திலீபனின் நினைவுத்தூபியை, நல்லூர் தேர் உற்சவ காலத்தில் பெருமளவிலான மக்கள் சென்று பார்வையிட்டனர்.

நல்லூர் தேர் உற்சவத்திற்குச் சென்ற, பெருமளவிலான பொது மக்கள் - நினைவுத்தூபியின் முன்னேநின்று, புகைப்படங்களை எடுத்துச் சென்றனர்.

அத்துடன், வெளிநாட்டில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களும், வெளிநாட்டவர்களும் - தேர் உற்சவத்தின்போது, திலீபனின் நினைவுத் தூபியையும் பார்வையிட்டு, அஞ்சலி செலுத்திச் சென்றதையும் அவதானிக்கமுடிந்தது.

## இலவச சீருடை பெறுவதற்கான விண்ணப்பிக்கும் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர் இலவசச் சீருடை பெறுவதற்கான விண்ணப்பிக்கும் திகதி செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைச் சீருடைத் துணி பெறுவதற்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

பாடசாலைகளில் விடுமுறை வழங்கப்பட்டதால், குறிப்பிட்ட நேரத்தில் சீருடை பெறுவதற்கான விண்ணப்பங்களை, சிலருக்குச் சமர்ப்பிக்க முடியாமையே இந்தக் கால எல்லை நீடிப்புக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணப் பத்திரிகையாளருக்கு ஒரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு



சுனந்த தேசப்பிரிய, மக்ஜெம்சன், டொகிரத் சிவதாசன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பத்திரிகையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம், பஸ்தியான் ஹோட்டலில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், ஐக்கிய இராச்சியத்தைச்சேர்ந்த பத்திரிகையாளர் மக்ஜெம்சன், வைத்திய கலாநிதி சிவதாசன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இரு அமர்வுகளாக இடம்பெற்ற இக்கலந்துரையாடலில்,

காலை அமர்வில் "தற்கொலை தொடர்பாக பத்திரிகைகள்" எனும் விடயத்திலும், மாலை அமரவில் "சிறுவர் பாதுகாப்பு" தொடர்பாகவும் கருத்துரைகள வழஙகப்பட்டன.

இக்கலந்துரையாடலில், பிரபல தென்னிலங்கை பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரியவும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

வாழ்க வளமுடன்

1½ HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : சு.சுருஸ்திகா
முகவரி: ஜேர்மனி,
(மாலிசந்தி)



மூன்றாவது அகவையில்



பெயர் : பா.ஆர்த்திகன்
முகவரி: தெய்வவாசா,
அல்வாய்.

ஐந்தாவது அகவையில்

பெயர் : பா.ஆதீஸ்
முகவரி: தெய்வவாசா,
அல்வாய்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

# கணினிக் கல்வியில் திறமையான

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதில் தற்பொழுது ஒரு பட்ட நிகழ்ச்சித்திட்டமும் தொடங்கப்படவில்லை. இது புலம்பெயர்ந்த தமிழர்களை மையமாகக்கொண்டு பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பான மேலதிக விபரங்களைப்பெற - **www.tamilvirtualuniv.org** என்ற இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.

இன்றைய தொழில்நுட்ப உலகில் அநேகமான தொழில்நுட்பக் கம்பனிகள் - ஒருகுறிப்பிட்ட தொழில்நுட்பத்தைக் கற்றுமுடித்து, அதில் நாம் வேலை செய்யத் தயாராக இருக்கின்றோம் என்று உறுதிகூறும். "தொழில்நுட்பச் சான்றிதழ்" ஒன்றை எம்மிடம் எதிர்பார்க்கின்றன. எனவே, நாம் இன்றைய தொழில்நுட்ப உலகை ஆக்கிரமித்திருக்கும் இந்த கம்பியூட்டர் தொழில்நுட்பத்திலே பல துறைகள் உள்ளன. அவற்றிலே குறுகிய காலத்தில் கற்றக்கொள்ளக்கூடிய துறைகள் பற்றியும் ஆராய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

குறுகிய காலத்தில் கற்கக்கூடிய துறைகளாக - **Programming, Networking, M.S Office** என்பவற்றினைக் கூறலாம். இவற்றை நாம் எமது பிராந்தியங்களில் காணப்படும் கணினி நிலையங்களில் கற்றுக்கொள்ளலாம். இவ்வாறாக, யாழ்.பிராந்தியங்களில் - புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் முயற்சியால் உருவாக்கப்பட்ட **ITP** யைக் குறிப்பிடலாம். இங்கே பல குறுங்காலப் பயிற்சி நெறிகள், மாணவர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு மாணவர்கள் சென்று, தமது தகைமைக்கு ஏற்பவும், தமது தேவைக்கு ஏற்பவும் பயிற்சி நெறிகளைத் தேர்வு செய்து கொள்ளலாம். **(ITP - Information Technology Park)** இதே போன்று பல தனியார் கணினி நிறுவனங்களும் யாழில் காணப்படுகின்றன.

இதேபோன்று, வன்னிப் பிராந்தியத்தில் - **ITTPO (International Tamil Technical Proffessional Organization)** என்ற அமைப்பால் **VIT (Vanni institute of technology)** என்ற நிறுவனம் அமைக்கப்பட்டு, பின்வரும் போதனைப் பகுதிகள் வழங்கப்படுகின்றன.

1. தரவுத்தள பிரயோக உருவாக்கம் **(Data base application development).**
2. வலைத்தள அடியொற்றிய பிரயோக உருவாக்கம் **(Web base application development).**
3. கணினித் தொடர்பாடல்களும், பிணையமாக்கல்களும் **(Computer communication and net work).**
4. இலத்திரனியல் **(Electronics)**


இவை 09 மாதங்களைக் கொண்ட கற்கைநெறி என்பதோடு, இதற்கான கட்டணமாக 7500/= அறவிடப்படுகின்றது. இதற்கான அனுமதித் தகைமையாக - **G.C.E. (O/L)** இருந்து பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வரை விண்ணபிக்கலாம். இந்த நிறுவனத்தில் கற்பவர்களிற்கு- இரண்டு வருட வேலை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதோடு, அவர்களுக்கான எதிர்கால வேலைவாய்ப்புப் பற்றியும் ஆராயப்படும். மாணவராகிய நீங்கள், இது பற்றிய மேலதிக விபரங்களைப்பெற -

| | | |
|---|---|---|
| **Web.site** | : | **www.vanni.org** |
| | | **www.ittpo.org** |
| **e.mail** | : | **Vanni tech@ ittpo.org** |
| **Post address** | : | **Registrar** |
| | | **Vanni institute of technology,** |
| | | **Killinochchi.** |

என்ற முகவரியினை நாடவும்.

இவ்வாறு பல்வேறு நிறுவனங்கள் இன்று காணப்படுவதால், பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவுசெய்து கொள்வது மாணவர்களின் பொறுப்பாகும். இதுவரையிலும் பிராந்தியரீதியான நிறுவனங்களில் குறுகியகால கணினி சான்றிதழ் பற்றிப் பார்த்தோம்.

இனிநாம் சர்வதேச அளவில் கணினி தொழில்நுட்பத்தில் பிரகாசிக்கும் எமது அண்டைய நாடான இந்தியாவில் நடைபெறும் கணினிக்கல்வி பற்றி மிகவும் சுருக்கமாகப் பார்ப்போம்.



இந்தியாவின் தொழில்நுட்ப நகரமாக விளங்கும் சென்னை, பங்களூர் போன்ற இடங்களில் காணப்படும் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் சிறந்த கணினி பட்டப்படிப்பை - இலங்கை மாணவர்களிற்கு வழங்குகின்றன. இந்த வசதி வாய்ப்பைப் பயன்படுத்தி, அங்குசென்று எமது மாணவர்கள் தமது எதிர்காலத்தினை வளம்படுத்திக் கொள்ளலாம். இந்திய பல்கலைக் கழகங்கள் - வெளிவாரித் துறையினூடாக இலங்கையிலிருந்து கொண்டே, இளமாணி **(Bachelor degree),** முதுமாணி **(Master degree)** பட்ட வாய்ப்புக்களைப்பெற வழி செய்துள்ளன.

எனினும், கணினி சம்பந்தமான கல்வியைத் தொடர இந்தியா சென்றே படிக்கவேண்டும். இந்த வகையில் அங்கு வழங்கும் பட்டங்கள் பற்றி நோக்குவோம்.

1. **B.C.A (Bachelor of Computer Application)**
2. **B.com+ (Bachelor of Commerce + Computer)**
3. **B.Sc (Bachelor of Science in Computer Science)**

போன்ற இளமாணிப் பட்டங்களையும்,

# சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?

1. **M.C.A (Master of Computer Application)**
2. **M.Com + (Master of Commerce + Computer)**
3. **M.Sc (Master of Science in Information Technology)**

என்ற முதுமாணிப் பட்டங்களையும் வழங்குகின்றன. மேலதிக விபரங்களைப்பெற- இந்திய தூதுவராலயத்துடன் மாணவர்கள் தொடர்புகொண்டு, அனுமதிக்கான நடைமுறைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை நாம் சர்வதேச, தேசிய, பிராந்தியரீதியாகக் கணினிக் கற்கைநெறி பற்றியும், அதனை நடாத்தும் நிறுவனங்கள் பற்றியும் அறிந்தோம். இனி நாம் பார்க்கப்போவது- எமது நாட்டில் கணினிக் கற்கை நெறியிலான பாதகநிலைமைகளாகும்.

பொதுவாகக் கணினிக் கற்கைநெறியில் - யாழ்.குடா நாட்டினை எடுத்துக்கொண்டால் - பல நிறுவனங்கள் பல்வேறு சான்றிதழ்களை வழங்குகின்றன. அதேபோன்று, மாணவர்களும் பல்வேறு துறைகளில் சான்றிதழ் பெற்றுள்ளனர். ஆனால், அவர்களது செயல்முறை **(Practical)** அறிவானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இதற்குக் காரணம் - பெரும்பாலான நிறுவனங்கள் எழுத்துப் பரீட்சைக்கு **(Theroy Exam)** முக்கியத்துவம் கொடுப்பதோடு, தொழிற்சாலை மட்டப் போதனைகளை வழங்காமையுமே ஆகும். உதாரணமாக - சில நிறுவனங்கள் தங்களுடைய சான்றிதழ்களில் 10 அல்லது 12 மணித்தியால செயன்முறைப் பயிற்சியில் ஈடுபட்டதாக்க் குறிப்பிட்டு சான்றிதழ்கள் வழங்குகின்றன. இம்முறையானது சான்றிதழ் பெருக்கத்திற்கு வழிவகுக்குமே தவிர, அறிவுரீதியான சிறப்புத் தேர்ச்சியைக் கொடுக்கக் கூடியதல்ல.

யாழ். குடாநாட்டினைப் பொறுத்தவரையில் - பெரும்பாலான இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பு அற்று இருக்கின்றனர். இதேபோல், யாழ். குடாநாட்டில் பல்வேறு புதுநிறுவனங்களின் வருகையும் (**A -9** பாதை திறப்பால்) அதிகரித்துள்ளன. இதனால், இங்கு ஊழியப் பற்றாக்குறையும் நிலவி வருகின்றது. இங்கே ஒரு முரண்பட்ட நிலையை நாம் காணமுடிகின்றது.

அதாவது, ஒரு பக்கத்தில் பல இளைஞர், யுவதிகள் வேலையற்றிருக்க, மறுபக்கத்தில் பல நிறுவனங்கள் ஊழியர் பறறாக்குறையால் திண்டாடுகின்றன. இதற்குக் காரணம்- எமது மாணவர்களிடையே சிறப்புத் தேர்ச்சி மற்றும் தொழிற்சாலை ரீதியான போதனை இன்மையே ஆகும்.

இதுபற்றி அண்மைக்காலமாகப் பல நேர்முகத் தேர்வு நடாத்தும் நிறுவனங்களை அணுகி ஆராய்ந்தபோது - பல இளைஞர், யுவதிகள் தம்மிடம் நேர்முகத் தேர்விற்கு வருகின்றபோதும், அவர்கள் பல்வேறுபட்ட சான்றிதழ்களை கைவசம் வைத்திருந்தபோதும், செயன்முறைரீதியாகப் போதிய அறிவின்மையே காணப்படுகின்றது, என்கின்றனர்.


அதாவது, ஒருவர் கணினி பற்றிய கற்கைநெறியில் பல சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்விற்குத் தோற்றிய போதும், சான்றிதழ்ரீதியாகப் போதிய அறிவு இருப்பதாகக் கருதியபோதும், அவர்கள் எதிர்பார்க்கும் கணினி செயன்முறைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் அல்லது காலத்தில் திருத்தமாக அல்லது நேர்த்தியானமுறையில் நிறைவேற்ற முடியாது திண்டாடுவதைக் காணமுடிவதாகக் கூறுகின்றனர். இதன் காரணமாக, அவர்களுக்குத் தாம் தகுந்த வேலைவாய்ப்பினையோ அல்லது நிறைவான ஊதியத்தினையோ கொடுக்கமுடியாதிருப்பதாகக் குறைபட்டுக்கொள்கின்றனர்.

இதனை அடிப்படையாக நோக்குகையில், யாழ். குடாநாட்டில் கோட்பாட்டுரீதியான கல்வியே தகவல் தொழில்நுட்பத்தில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணமுடிகின்றது. ஆனால், நிறுவனங்கள் எதிர்பார்ப்பதோ செயன்முறை ரீதியான கல்வியாகும்.

எனவே, இந்த நடைமுறையினை வெகுவிரைவில் மாற்றியமைக்க வேண்டிய தேவை எமது சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனை நாம் இப்பொழுதே களையாதுவிட்டால், யாழ். குடாநாட்டில் பெரும் தொழில்நுட்ப இடைவெளியேற்பட்டு, அதன் சார்பாக ஊழியப் படைப்பெருக்கமும், வேலையின்மை, விரக்தி, சமூகச்சீரழிவு என்பன தலைதூக்கித் தாண்டவமாடத் தொடங்கிவிடுவதோடு, கலாசாரச் சீரழிவை உண்டுபண்ணிவிடும்.

எனவேதான், இதனைத் தடுக்க நாம் விழித்தெழ வேண்டும். இதற்காக, பல்கலைக்கழப பேராசிரியர்கள், அரச அதிகாரிகள், தொழில்வல்லுநர்கள், அரச சார்பற்ற பிரதிநிதிகள் என்று எல்லோரும் ஒன்றுசேர்ந்து, தமக்குள் ஓரமைப்பை உருவாக்கி, இந்தப் பிராந்தியத்திலே காணப்படும் தகவல் தொழில்நுட்பம்சார் நிறுவனங்களிடையே ஒரு பொதுத்தன்மையை உருவாக்கி - அவற்றின் கற்கைநெறி, கால அளவு, தொழிற்சாலைப் போதனை, கற்கைநெறி முடித்த மாணவர்களின் எதிர்கால வேலைவாய்ப்பு (உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ) என்பன தொடர்பான கொள்கையினை வகுத்தல் வேண்டும்.

இவ்வாறு கொள்கை வகுத்து செயற்படுவதனூடாக, ஈழநாட்டில் ஒரு தொழிலநுட்பப் புரட்சியினை ஏற்படுத்தலாம். (ஐரோப்பிய நாட்டில் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியே, இன்று அந்த நாடுகளின் அபிவிருத்திக்குக் காரணம்). இதன் காரணமாகக் கல்வி, கலாசார தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணம் தொழில்நுட்ப தலைநகராக மிளிரலாம். இந்தியாவில் பங்களூர் தொழில்நுட்பம் போன்று, ஈழத்தின் யாழ்.தொழில்நுட்பம் **(Jaffna Technology)** இமயம்வரை செல்லுமா? இதற்கு விடை காண்பது இன்றைய சமூகப் பெரியோர்களையே சார்ந்ததாகும்.



அல்லாதுபோனால், யாழ். மாநகர சபையால் வழங்கப்படும் இலக்கத்தகடுகளைக் காட்டிக்கொண்டு (அனுமதியுடன்) தெருவழியில் திரியும் நாய்கள் போன்று, பல சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு, வேலைதேடி தெருவழியே திரியும் இளைஞர், யுவ்திகள் நிலைமையினை வேடிக்கை பார்ப்பார்களா? இதே போன்று, மாண்வர்களும் நடைபாதைக் கடையில் உடுபுடைவை வேண்டுவது போன்று, கண்டகண்ட இடமெல்லாம் பணத்தினைக் கொட்டி சான்றிதழைப் பெற்று ஏமாந்து நிற்பார்களா? (முற்றும்)

**சேனாதிராசா ஜெயானந்தன்**
**இடைவரவு விரிவுரையாளர்**(computer)
**யாழ். தொழில்நுட்பக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

# தொழில் வங்கி



| நிறுவனம் | இலங்கை சோசலிச இளைஞர் தலைமைத்துவ செயற்திட்ட ஸ்தாபனம் | இலங்கை இதழியல் கல்லூரி |
|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | 1. செயற்திட்ட அலுவலர். (1- வெற்றிடம்)<br>2. திட்ட உதவியாளர்.<br>i) தரவை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம். (1 - வெற்றிடம்)<br>ii) திட்ட உதவியா்ளர் ஆய்வு சார்ந்தவை. (2- வெற்றிடம்)<br>iii) தகவல் முகாமைத்துவம். (1- வெற்றிடம்)<br>3. செயற்திட்ட உதவியாளர். (1- வெற்றிடம்) | 1. இயக்குநர்<br>2. தமிழ்மொழிமூல விரிவுரையாளர் |
| அடிப்படைத் தகுதி | 1. சமூகவிஞ்ஞானம் / கல்வி பட்டதாரி<br>ஆங்கிலப் புலமை<br>கணினிக்கல்வி, 2 வருட அனுபவம்.<br>2. i) உயிரியல்துறைப் பட்டதாரி<br>கணினிக்கல்வி<br>ஆங்கிலப் புலமை கூடுதல் தகைமையாகக் பரிசீலிக்கப்படும்.<br>ii) சமூக விஞ்ஞானப் பட்டதாரி<br>ஆங்கிலப் புலமை<br>iii) தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல், இதழியல் பட்டதாரி<br>2 வருட அனுபவம், ஆங்கிலப்புலமை.<br>3. உயர்தரம் சித்தி<br>ஆங்கிலப் புலமை, Word Processing.<br>அனைத்து பதவிகளுக்கும் வயதெல்லை 35 இற்கு உட்பட்டது. | 1. மானுடவியல், சமூக விஞ்ஞானம், வணிக முகாமைத்துவம், ஊடகக்கல்வி அல்லது அது தொடர்பான துறையில் இளமாணிப்பட்டம்.<br>ஆங்கிலப் புலமை,<br>10 வருட அனுபவம்.<br>2. மானுடவியல், சமூக விஞ்ஞானம், ஊடகக்கல்வி அல்லது அது சார்ந்த துறைகளில் தமிழ்மொழிமூல இளமாணிப்பட்டம்.<br>தமிழ்மொழி/இலக்கியம் பட்டப்பின் கல்வி.<br>5 வருட கற்பித்தல் அனுவம். |
| விண்ணப்ப முடிவு திகதி | 05.09.2003 | 12.09.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க

**காலத்தால் அழியாத கலைப்படைப்புக்களைத் தனது கைவண்ணத்தால் உருவாக்கிக்கொண்டிருப்பவரே சிற்பக் கலைஞான பானு சு.பாஸ்கரன் ஆச்சாரியார். கருங்கல்லிலும், ஐம்பொன்னிலும் என ஆயிரக்கணக்கான தெய்வீக விக்கிரகங்களைப் படைத்திருப்பவர். சிற்பங்களைப் படைப்பது மட்டுமல்லாது, ஆகம விதிகளுக்கு அமைய ஆலயங்களை அமைப்பது, பழுதடைந்த விக்கிரகங்களைச் செவ்வை பார்ப்பது, பின் முலாமிடுவது என அவரது பணிகள் வியாபிக்கின்றன. அவருடனான ஒரு நேர்காணல்.**



**சிற்பக்கலையிலே நீங்கள் எவ்வாறு உள்வாங்கப்பட்டீர்கள்?**

இந்தச் சிற்பக்கலையானது எமது பரம்பரை வழிப்பட்டது. எமது பாட்டனார், பேரனார், தந்தையாரென இக்கலை தொன்றுதொட்டே வந்து, இன்று எனது கைகளிலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. எனக்குப் பின்னே எனது பிள்ளைகள் இந்த கலையைத் தொடர்ந்து செய்யக்கூடியநிலையிலே உள்ளார்கள். எனது தந்தையார் சுப்பிரமணியம் ஆச்சாரியாரிடமிருந்துதான், நான் இந்த துறைசார்ந்த கலை நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன். இந்தக் கலையைக் கற்க ஆரம்பித்த காலப்பகுதிகளிலே கடினமாகத்தான் இருந்தது. ஆனால், காலம் செல்லச்செல்ல, அனுபவம் வளரத்தொடங்க, தற்போது இலகுவாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

**சிற்பக்கலைத் துறையிலே ஈடுபடும்போது, தாங்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் பற்றிக் கூறமுடியுமா?**

நிறையவே இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் - சிற்பங்களில் தவறுகள் ஏற்பட்டுவிட்டால், மீண்டும் திருப்பி கொணர்ந்து தருவார்கள். இதனால், சிலவேளைகளில் நட்டமடைய நேரிடும். சிலர் வேறு எவருமே செய்வதற்கு சம்மதம் தெரிவிக்காத வேலைகளை, எம்மிடம் கொண்டு வருவார்கள். அவை மிகக் கடினமாக இருக்கும். அவற்றைத் திறம்பட செய்துகொடுக்க வேண்டும். சிலவேளைகளில், ஆலயங்களை ஆகம விதிக்கு முரணாக அமைத்து விடுவார்கள். அவற்றை நாம் மீண்டும் மறுசீரமைக்க வேண்டிய தேவைகூட ஏற்படும். இவ்வாறு நிறையவே இடர்பாடுகளை எதிர்கொண்டுதான் இந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**தங்களின் சிற்ப அமைப்புத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களை எவ்வாறு பெற்றுக்கொள்கிறீர்கள்?**

நாங்கள் - எமக்குத் தேவையான செம்பு, பித்தளை போன்ற உலோகங்களைப் பொதுவாக யாழ்ப்பாண நகரக் கடைகளிலேயே பெற்றுக்கொள்வோம். கிராமங்களிற்குள் செல்லும் தொழிலாளிகள் - பழைய பித்தளை, செம்பு பாத்திரங்களைக் கொள்வனவு செய்து வருவார்கள். அவர்களிடம் இருந்தும் நாம், எமக்குத் தேவையான உலோக மூலப்பொருட்களை பெற்றுக்கொள்கின்றோம்.

கருங்கல்லிலே அமைக்கப்படும் விக்கிரகங்களிற்கு வேண்டிய கருங்கல்லினை - வவுனியா மாவட்டத்தில் இருந்தே பெற்றுக்கொள்கின்றோம். வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு லொறி கருங்கற்களைக் கொண்டு வருவதற்கு - முப்பத்தைந்தாயிரம் ரூபாவிற்கு மேலே செலவாகிறது என்பது இங்கே குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

அதேவேளை, தற்போது A-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்டமையால், பழைய உலோகங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனாலே, நாம் பெரிதும் கஷ்ரப்பட வேண்டியுள்ளது. உலோகங்களின் விலைகள்கூட அதிகரித்துள்ளன. இது தடுக்கப்பட வேண்டிய விடயமாகும். ஏனெனில், இங்கு உற்பத்திகள் இல்லாமையால், இனிவரும் காலங்களில் உலோகப் பொருட்களிற்குத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பும் உண்டு.

**சிற்பக் கலைத்துறையைப் பொறுத்தவரையில், இந்தியாவிற்கும் - ஈழத்திற்கும் இடையிலான தொடர்பைப் பற்றிக் கூறமுடியுமா?**

இந்தியாவைப் பொறுத்தவரையிலே, சிற்பத்துறையானது பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டும், தொடர்ந்து கற்கப்பட்டும் வருகிறது. இந்திய அரசுகூட அது தொடர்பான அக்கறை எடுத்து செயற்பட்டு வருகிறது. மாமல்லபுரத்தினையே, பல்லவ காலம் தொடக்கமே சிற்ப வேலைகளின் கலைப் பொக்கிஷமாகவே பேணி வருகின்றார்கள். இந்தநிலை ஈழத்திலே இல்லை. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக எமக்குப் பின்வருபவர்கள்

## அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்

இந்த தொழிலை மேற்கொள்வார்களா எனும் ஐயப்பாடே இருக்கிறது. நான் எனது பிள்ளைகளை இந்த கலையின் பால் ஈர்க்க நடவடிக்கை எடுத்துள்ளேன். ஒவ்வொருவரும் தமது கலைகளைத் தொடர்ந்தும், பரம்பரை வழியே கடத்துவதற்குப் பாடுபடவேண்டும்.

இந்தியாவிலே இவ்வாறு பரம்பரை பரம்பரயாக இந்த தொழில் கடத்தப்படுவதனாலேயே, சிற்பங்களின் தரம் அதிகரித்துக்கொண்டு போகிறது என்பது கண்கூடு. இந்தியாவைப் பொறுத்தவரையிலே - கலைஞர்களின் எண்ணிக்கையும், கலையின் அழகும் அதிகம் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

சிலவேளைகளிலே, எமக்கும் அவர்களுக்கும் நிறையவே வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக :, பஞ்சமுக விநாயகர் உருவத்திலே சிலர் மேற்புறமாக ஒரு தலையை வடிவமைக்கிறார்கள். நாங்கள் ஐந்து தலைகளையும் ஒரு சுற்றிலே தான் அமைக்கிறோம். சிற்பக்கலை என்பது எமது எண்ணத்திற்கு செய்யகூடியதொன்றல்ல. அவை தொடர்பான விதிகள் அடங்கிய் நூல்கள் உண்டு. அளவுப் பிரமாணங்கள் உண்டு. அவற்றின்படிதான் ஒவ்வொரு கலைப்படைப்பும் படைக்கப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

**தற்போதைய சூழ்நிலையிலே இந்திய சிற்பங்கள் இங்கு வந்து சேர்கின்றன. அது தொடர்பாகத் தங்களின் நிலைப்பாடு என்ன?**

இந்திய சிற்பங்களின் வருகையால், எமது தொழில் துறையிலே பெரும்பாலும் எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்றுதான் கூறவேண்டும். ஒரு வகையிலே அவற்றின் இறக்குமதி நன்மையாகக்கூடவுள்ளது. ஏனெனில், யாழ்ப்பணத்திலே சிற்பக் கலைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளமையால், அதிகரித்த எமது மக்களின் தேவைகளை நிறைவுசெய்ய முடியாதுள்ளது. எனவே, இப்பொருட்களின் இறக்குமதி ஒரு வகையிலே எமக்கு ஆறுதலாக உள்ளது என்று தான் கூறமுடியும்.

**தங்களால் படைக்கப்பட்ட கலைப்படைப்பிலே, உளம் கவர்ந்த படைப்பொன்றையும், இன்னும் படைக்க நினைக்கும் படைப்புக்கள் பற்றியும் கூறமுடியுமா?**

என்னால் படைக்கப்பட்ட படைப்புக்களிலேயே என்னை மிகவும் கவர்ந்தது - ஏழாலை வசந்த நாகபூஷணி அம்மன் கோயிலிலுள்ள விக்கிரகம். அதனது உயரம் நாலடி இருக்கும். மிக்வும் அழகாக அமைந்த ஒரு சொரூபம். பலராலும் போற்றப்பட்டது.

இன்னும் படைக்கவேண்டும் என எண்ணும் படைப்புக்களில் - அறுபத்து மூன்று நாயன்மார்களிலே நால்வரினுடைய விக்கிரகங்களைதான், இன்று எல்லோரும் செய்கிறார்கள். மீதப்பேருடைய விக்கிரகங்களும் படைக்கவேண்டும் என்பதே எனது அவா. அதற்கு யாராவது ஒரு சிவன் கோயிலைச் சேர்ந்தவர்கள் முன்வரவேண்டும்.

சந்திப்பு:
சர்வேஸ் & நகுலன்.

# வேளாண்மையில் தரமான விதைகள்



விதைகளின் வளர்ச்சியின்போது - விதை அமைப்பிலும், தரத்திலும், ஊட்டச்சத்து, சுற்றாடல் நிலைமை இன்னும் பல காரணிகளும் ஏற்படுத்தும் தாக்கத்தைத் தீர்மானிக்கத் தாவர சரீரவியலாளர்கள் **(Plant Physiologists)** அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தாவரவியலாளர்கள் **(Botanists)** - தாவரங்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றனர். பூச்சியியலாளர்கள் **(Entomologists)** - தாவரங்களுக்குத் தாக்கங்களை ஏற்படுத்தும் பூச்சிகளைப் பற்றி ஆராய்ந்து, பீடைகளினால் ஏற்படும் அழிவுகளைக் குறைப்பதற்கான ஒரு முடிவிலா யுத்தத்தில் இறங்கியுள்ளனர். உற்பத்தியாளர்கள் - கண்டிப்பாக விதை உற்பத்தியில் உயர்ந்த திறமை வாய்நத தொழில்நுட்பத்தைப் பாவனைக்கு உட்படுத்தவேண்டும். அறுவடைக்கும், நோயற்ற விதைகளைப் பேணுவதற்கும் விசேடகவனம் செலுத்தப்படல் வேண்டும்.

விதைகள் முளைத்தலின்போது, பல பிரச்சனைகள் இருக்கின்றன. வெவ்வேறு வகை விதைகளுக்கிடையே அவை வித்தியாசமானவையாகத் தீர்மானிக்கப்படலாம். ஒவ்வொரு நாட்டிலும் விதைகளைச் சோதனை செய்வதும், பகுப்பாய்வு செய்வதும் மிகுந்த பலனைக் கொடுக்கும். ஆனால், இவற்றைச் செயற்படுத்துவது - மூன்றாம் உலக நாடுகளில் பிரச்சனைக்குரிய ஒன்றாக உருவாகியுள்ளது.

இதற்குக் காரணம் வசதியின்மையே. அநேக நாடுகளில் விதைகளின் தரங்கள் நிர்ணயிக்கப்பட்டு, தரம் விற்பனைக்கு முன்னர் பேணப்பட வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. விதை விற்பனையானது, தனக்குள்ளாகவே ஒரு கைத்தொழிலை உண்டாக்கியிருக்கின்றது. பல சிக்கல்கள் நிறைந்த இந்த விதைக் கைத்தொழிலுக்கு, இறுதியாக உபகரண உற்பத்தியாளர்கள் - தேவையான உபகரணங்களை வழங்கி, அவை திறம்படச் செயற்பட ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

## உற்பத்தி, இலாபத்தில் கூடிய பங்கு

மனிதனுக்கும், வளர்ப்பு மிருகங்களுக்கும் தேவையான உணவு, உடை, உறையுள் போன்றவற்றைக் கொடுக்கும் விதைகளை - மனிதன் பிரயோசனப்படுத்தும் அதேவேளை, விதைகள் உற்பத்தியும் விரிவடைந்து கொண்டிருக்கின்றது. மர உற்பத்திக்கான விதை உற்பத்தியும் முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பதுடன், உலகெங்கும் உள்ள நிலங்களில் மீள் நடுகைக்காக மிகப் பாரிய அளவில் தேவைப்படுகின்றது. வருடாவருடமும், பருவத்திற்குப் பருவமும் நல்ல தரமுடையதுமான, விரும்பத்தக்கதுமான விதை உற்பத்தியாக்கும் பாரிய பொறுப்பு - விதைக் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் அங்கத்தவர்களிடம் விடப்பட்டிருக்கின்றது. அறுவடை செய்த நாளிலிருந்து, நடுகைக்குரிய காலம் வரை, விதைகளைச் சேமித்துப் பேணிப் பாதுகாக்கவேண்டியது அவசியமாகின்றது. ஒரு பருவத்திலிருந்தோ அல்லது பல பருவங்களிலிருந்தோ மேலதிகமாகப் பெறப்பட்ட அறுவடை உற்பத்தியை, நல்லமுறையில் சேமித்து வைப்பது பொருளியல்ரீதியில் எப்போதும் ஒரு விரும்பத்தக்க நிலையாகும்.

விதை வகைகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டிற்கமையும் வண்ணம், அவைகளைப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தும் முறைகளை அறிந்து கொள்வது அவசியமாகின்றது. பல்வேறு காலநிலைகளிலும், நிலைமைகளிலும்- விதைகளின் தரங்களை நிலைத்து வைத்திருக்கும் தன்மையைத் தீர்மானிப்பதற்காக, பல வருடங்களாக விதை, சரீரவியலாளர்களும் **(Seed Physiologists),** அதனோடு தொடர்புடையவர்களும் கரிசனைகாட்டி நடுகையில் வெற்றியளிக்கக்கூடிய அல்லது இறந்த விதைகளின் மேலோட்டின் இரகசியங்களைக் கண்டறிய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாய உற்பத்தியைத் தேசியமட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் மேம்படுத்த, நாம் சிறந்த தரமுடைய விதைகள் உற்பத்தி செய்வதை எமது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

"தரமான விதை - வேளாண்மையின் முதுகெலும்பு"

**கலாநிதி வை.அருள்நந்தி**
மாணவர் பகுதி, விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சங்கானை | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 30/= | 30/= | 40/= | 30/= | 35/= |
| வெண்டிக்காய் | 10/= | 15/= | 30/= | 20/= | 10/= | 15/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 70/= | 70/= | 70/= | 60/= |
| கத்தரிக்காய் | 50/= | 40/= | 40/= | 50/= | 50/= | 40/= |
| பாகற்காய் | 30/= | 40/= | 20/= | 40/= | 25/= | 30/= |
| கரட் | 50/= | 45/= | 40/= | 60/= | 40/= | 50/= |
| பீற்றூட் | 20/= | 10/= | 20/= | 20/= | 10/= | 20/= |
| முருங்கைக்காய் | 40/= | 40/= | 30/= | 60/= | 40/= | 60/= |
| வெங்காயம் | 20/= | 30/= | 30/= | 30/= | 20/= | 30/= |
| பச்சை மிளகாய் | 50/= | 40/= | 60/= | 50/= | 40/= | 40/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்*
*நடுக்கற்ற காட்சி யவர்.*

-தமிழ்ப்பழமொழி

# நமது நோக்கு

## ஆரோக்கியமான எதிர்காலம்

நிலக்கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணம் வழங்கல், புனர்வாழ்வு அளித்தல் மற்றும் சுயமுயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகள் அடங்கிய திட்டவரைபொன்றைச் சமர்ப்பிக்குமாறு, ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்திடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் கேட்டுள்ளார்.

கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றுதல் மற்றும் துரித நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வு அளித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அடங்கிய திட்ட வரைபுகளை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் தயாரித்திருந்தது.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மிதிவெடிகளை அகற்றும் செயற்பாட்டில் கடந்த பல வருடங்களாகவே ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் பங்களிப்பைச் செலுத்திவருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரச செயலகத்துடன் இணைந்த வகையில் இதன் செயற்பாடுகள் இடம்பெற்றுவந்தன.

அண்மைக்காலத்தில் குடாநாட்டிலும் சரி, வன்னிப் பகுதியிலும் சரி - பல்வேறு வெளிநாட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றபோதும், ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டமே இவற்றுள் முன்னோடியாகச் செயற்பட்டுவருகின்றது.

இந்தவகையில் - கண்ணிவெடிகளால் பாதிப்புற்றோருக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பான திட்டவரைபு ஒன்றை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கோரப்படுவதற்கு, ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டமே பொருத்தமான நிறுவனமாகக் கருதப்படுகிறது.

கண்ணிவெடிகளால் பாதிக்கப்படும் மக்களின் தொகை- போர் ஓய்ந்துள்ள இந்தக் காலகட்டத்திலும் அதிகரித்தபடியே இருக்கின்றது. கடந்த சில வாரங்களை எடுத்துக் கொண்டால் சிலர் மரணமடையவும், பலர் காயமடையவும் கண்ணிவெடிகள் காரணமாகியுள்ளன.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு, வடக்கு - கிழக்கில் முழு வீச்சில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் - இத்தகைய செயற்பாடு முழுமை பெறுவதற்கு பல வருடங்கள் செல்லும்.

இந்தக் காலகட்டத்துக்குள் இன்னும் பலர் கண்ணிவெடிகளால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய அபாயங்கள் இருக்கின்றன. இதனால் கண்ணிவெடிகளால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு அளித்தல், உடனடி நிவாரணம் வழங்கல், சுயதொழில் முயற்சி உதவிகளை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகளுக்கு முக்கியமான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

கண்ணிவெடிகளால் பாதிக்கப்படுவோர் சிறுவர்கள் முதல் குடும்பஸ்தர்கள் வரை இருப்பதால், இவர்களுக்குப் பொருத்தமான புனர்வாழ்வுச் செயற்திட்டங்கள் வகுக்கப்படுதல் அவசியம்.

சிறுவர்களைப் பொறுத்தவரையில் - இத்தகைய பாதிப்புக்குள்ளாகும்போதும், அவர்களின் முழு எதிர்காலமுமே கேள்விக்குறியாகின்றது. இத்தகைய சூழலில் அவர்களை முழுமையாக அந்த இடர்ச்சூழ்நிலையிலிருந்து மீட்டு, எதிர்காலத்திற்கு அவர்களுக்கு வழிகாட்டுவது அவசியமான செயற்பாடாகும்.

கண்ணிவெடிகளால் பாதிக்கப்படும் சிறுவர்களின் நிலை மிகவும் மோசமானது. இச்சிறுவர்களின் கல்வி நிலையில் இருந்து, தொழில் பெறும் நிலைவரை தகுந்த புனர்வாழ்வுச் செயற்திட்டம் வகுக்கப்படவேுண்டும்.

அதனூடாகவே, இத்தகைய சிறார்களின் எதிர்காலத்தை வளப்படுத்த முடியும். ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கவுள்ள இந்த புனர்வாழ்வுச் செயற்திட்டத்தில், பாதிக்கப்பட்ட சிறார்களின் புனர்வாழ்வு குறித்து முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டிய அதேவேளை - பாதிக்கப்பட்டுள்ள குடும்பஸ்தர்கள் குறித்தும் கவனம் செலுத்துதல் அவசியம்.

காரணம் என்னவெனில், குடும்பஸ்தர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களின் காரணமாக, அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உருவாகும்.

இதனால் ஒவ்வொரு படிநிலையின் கீழ் உள்ளவர்களுக்கும் - தனித்தனியானதும், பொருத்தமானதுமான புனர்வாழ்வளித்தல் செயற்திட்டங்கள் வகுக்கப்படுதல் வேண்டும். இந்தப் பணியை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால், நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என நம்பப்படுகிறது.

ஆனாலும், இத்தகைய அனர்த்தங்களிலிருந்து விடுபடக்கூடிய சூழலை விரைவாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமாகும். எதிர்காலத்தில் இந்த கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு முன்னுரிமை கொடுப்பதனூடாக, பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதுதான் முக்கியமான செயற்திட்டமாக அமையவேண்டும். அதுவே ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழிதரும்.

# நாங்கள் எந்தவொரு தேர்தலையும் எந்தநேரத்திலும் சந்திக்கத் தயார்!

## சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிறந்தநிலையில்தான் இருக்கிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாரான நிலையிலேயே கட்சியை ஒழுங்கமைத்துள்ளோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாங்கள் பலத்த சவால்களுக்கு மத்தியில்தான் முன்னேறி வருகிறோம். மாகாணசபைத் தேர்தலுக்கு, முறையான நடவடிக்கை எடுத்து, தகுதியான வேட்பாளர்களைப் போட்டியிடவைப்போம்.

ஜே.வி.பியுடனான கூட்டு உடன்படிக்கை நல்லநிலையை நோக்கி நகர்ந்து வருகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- பொலநறுவையில் நடத்திய கூட்டத்தில் இருநூறு பொது மக்களாவது கலந்துகொண்டனர் என்பதை நிரூபித்தால், நான் பதவிகளை இராஜினாமா செய்வேன்.

தற்போது ஐ.தே.கட்சிக்குள் ஒற்றுமை இல்லை. தமது சுயலாபத்துக்காகவே எல்லாவற்றையும் செய்கின்றனர். நாங்கள் விரைவில் அரசமைத்தாலும், ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளமாட்டோம். எங்கள் கட்சியில் கருத்து வேறுபாடுகள் இல்லை. நல்ல ஒற்றுமை நிலவுகினறது. எனவே, நாம் ஒற்றுமையாகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவோம்.

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சைக்கிள் திருடிய இருவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை

யாழ். நகரப் பகுதிகளில் சைக்கிள்களைத் திருடிய குற்றத்திற்காக இருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த ஒருவருக்குமே - இருவருடங்களுக்கு ஒத்திவைக்கபபட்ட ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ். நகரப் பகுதிகளில், சைக்கிள்களைத் திருடிய குற்றத்திற்காக, இவர்களுக்குச் சிறைத தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் - இடம்பெற்ற விசாரணையின்போதே, நீதிவான் விக்னராஜா - இத்தண்டனையை விதித்தார். அத்தோடு, இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமாக விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் ரணில் அடுத்தமாதம் மலேசியாவுக்குச் செல்கிறார்

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் மலேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கு முதலீட்டை வரவழைக்கும் நோக்கமாகவே, பிரதமர் மலேசியாவுக்குச் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. இதேவேளை, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மலேசியாவுக்குப் பயணம் செய்வதறகுத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் 30 பேர் கொண்ட குழு நேற்று மலேசியாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தனர்.

# ஊழியர் சங்கப் போராட்டம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மௌனம்

## ஊழியர் சங்கத் தலைவர் கவலை

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் - எமது போராட்டம் பற்றி இதுவரை அக்கறை எடுக்காதுள்ளனர். இவர்கள், தங்கள் ஆதரவைப் பத்திரிகைகள் வாயிலாகக்கூட இன்னும் வெளியிடாமல் இருப்பது, மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறு, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

தொடர்ச்சியாகப் பதினைந்து நாட்களாக நடந்துவரும், வேலைநிறுத்தப் போராட்டத்தின் ஒரு படியாக, நேற்று மதியம் தொழிற்சங்கத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு, மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்- தனது பிரதிநிதியை இங்கு அனுப்பியிருந்தார். அவர் எமது நிலைப்பாட்டைக் கேட்டறிந்து சென்றுள்ளார். எமது தேவைகளையும், தன்னால் வழங்கக்கூடிய உதவிகளையும் பற்றி ஆராய்ந்துள்ளார். இது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

இப் போராட்டத்தைக் குழப்புவதற்குச் சில சக்திகள் முனைப்பாக நின்றாலும், எமது ஊழியர்கள் ஏமாந்து விடக்கூடாது. ஒற்றுமையாக நிற்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். நேற்று இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், வடமாகாண தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம், வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சிவபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்கள் அனைவரும் தமதுரையில் - ஊழியர்கள் ஒற்றுமையாக நிற்கவேண்டும், எனவும் தங்கள் ஆதரவு என்றும் ஊழியர்களுக்குக் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். அதேவேளை, பல்கலைக்கழக விஞ்ஞானபீடப்பகுதிக்கு மின், நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டமைக்கும், தமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை எனவும் ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஒரு சில ஊடகங்களை நம்பி வெளி இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் விடுதிகளுக்கு திரும்பியுள்ளமையால், அவர்கள் நலனைக் கருத்திற்கொண்டு - நீர், மின் விநியோகத்தை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஊழியர்கள் சம்மேளனம் - ஊடகங்கள் மூலமாகச் சாதகமான முடிவை அறிவிக்கும்வரை, மாணவர்கள் இது தொடர்பாகக் கவனமாக இருக்குமாறு ஊழியர்சங்கப் பிரதிநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.



தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் போராட்டத்தின் ஒரு கட்டமாக, யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் ஊழியர் சங்கத் தலைவர் உரையாற்றும் காட்சி.

## செம்மணி எலும்புக்கூடுகள் மரபணுப் பரிசோதனைக்கு!

செம்மணியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக மேலதிக விசாரணைகளுக்காக, மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை மரபணுப்பரிசோதனை செய்ய பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, பிரிட்டன் ஜோக்செயர் பல்கலைக்கழகத்திற்கு- மரபணுச்சோதனைக்கென இரத்த மாதிரிகளும் அனுப்பி வைக்கப்படவுள்ளன. பிரிட்டனுக்கு அனுப்பப்படவுள்ள எலும்புக்கூடுகள், இரத்த மாதிரிகளுக்கு ஊடாக, 2 மாத காலத்துக்குள் பரிசோதனை முடிவுகள் பெறப்படும் என்றும், மேலும் திருப்பங்களை இந்த விசாரணைகளில் காணமுடியும் என்றும் சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர்.

# பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இனிமேல் கிராம அலுவலர்களிடம் பெறலாம்

## அமைச்சர் அலுக் அலுவிகார தகவல்

கச்சேரியில் இதுவரை காலமும் பெறப்பட்டு வந்த பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் முதலான பத்திரங்களை, இனி வரும் காலங்களில் கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்வதற்கு வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சர் அலிக் அலுவிகார இது தொடர்பாக மேலும் தெரிவிககையில் -

பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை இனிவரும் காலங்களில், கிராம அலுவலர்களிடம் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மக்களுக்கு இலகுவானமுறையில் இவை தொடர்பான சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டம், விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு - ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

## பொது உளச்சார்பு

நேரம் :1 மணித்தியாலம்

இவ்வினாத்தாள் தொடர்பான மாதிரி வினாக்களும் விடைகளும் 'நமது ஈழநாடு' பத்திரிகையில் 28 மே, 04, 11, 18 ஜுன், 16 ஜுலை, 06 ஓகஸ்ட் ஆகிய தினங்களில் பிரசுரமாகின. இதனைவிட எதிர் பார்க்கையுடனான மாதிரி வினாத்தாள் தற்போது பிரசுரமாகிறது. 'கடின முயற்சி உயர் பெறுபேறு'.

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01 தொடக்கம் 03 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் நான்கு கூற்றுக்கள் உள்ளன. அவற்றில் மூன்று கூற்றுக்கள் எளிய சிந்தனைகளாக இருக்கும். அதேவேளை, மற்றைய கூற்று ஒரு முடிவு ஆகும். அம்முடிவைத் தெரிந்தெடுக்க.**

01. (1) எமது பயணம் நாம் நினைப்பதைக் காட்டிலும் தாமதமாகும்.
(2) வீதியில் வாகனங்கள் அதிகமாகும்.
(3) எனது காரில் ஒரு பொறிமுறைக் குறைபாடும் உண்டு.
(4) மூடுபனி காரணமாக வீதி தெளிவாக இருக்க வில்லை.

02. (1) நான் எலியின் மணத்தை உணர்கிறேன்.
(2) எனது நூலக அறையில் ஓர் எலி இருக்கிறது.
(3) ஓர் எலி - எனது நூல்கள் சிலவற்றைச் சேதப் படுத்தி உள்ளது.
(4) எனது நூலக அறையின் கதவு எப்போதும் திறந்திருக்கிறது.

03. (1) சொக்கலேட் சாப்பிடுவதற்கு ஒவ்வொருவருக்கும் விருப்பம் உண்டு.
(2) பற்சிதைவு பிள்ளைகளிடையே அதிகளவில் காணப்படுகிறது.
(3) நீரிழிவுநோய் - இளைஞர்களிடையே பரவுகின்றது.
(4) சொக்கலேட் உண்ணுதல், நோய்கள் பலவற்றுக்கு அடிப்படைக் காரணமாகும்.

**04 தொடக்கம் 07 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய திருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.**

ஐந்து ஓடுநர்கள் பந்தயவோட்டம் ஒன்றை முடித்த விதம் கீழே தரப்பட்டுள்ளது.
* முரளி கண்ணனைக் காட்டிலும் ஒரு செக்கன் முன்னால் இருந்தான்.
* கண்ணன் சேகரைக் காட்டிலும் இரு செக்கன் முன்னால் இருந்தான்.
* சேகர் ரவியைக் காட்டிலும் ஒரு செக்கன் பின்னால் இருந்தான்.
* ரவி முரளியைக் காட்டிலும இரு செக்கன் பின்னால் இருந்தான்.
* அருணன் சேகரைக் காட்டிலும் இரு செக்கன் பின்னால் இருந்தான்.

04. இந்த ஐந்து ஓடுநர்களும் போட்டியை முடித்த ஒழுங்கு பின்வருவனவற்றில் எது
(1) முரளி, ரவி, கண்ணன், சேகர், அருணன்.
(2) ரவி, முரளி, கண்ணன், சேகர், அருணன்.
(3) முரளி, கண்ணன், ரவி, சேகர், அருணன.
(4) கண்ணன், முரளி, ரவி, சேகர், அருணன்.

05. போட்டியை முடிப்பதற்கு முரளியும் அருணனும் எடுத்த நேரங்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?
(1) 2 செக்கன் (2) 3 செக்கன்
(3) 4 செக்கன் (4) 5 செக்கன்

06. ஆறாவது ஓடுநர், ஐந்தாவது ஓடுநரைக்காட்டிலும் 5 செக்கனின் பின்னர் போட்டியை முடித்தார். அவர் போட்டியை முடிப்பதற்கு 2 நிமிடம் 11 செக்கன்களை எடுத்தார். அவ்வாறெனின், போட்டியில் வெல்பவர் போட்டியை முடிப்பதற்கு எடுக்கும் நேரம் யாது?
(1) 2 நிமிடம் 1 செக்கன்
(2) 2 நிமிடம் 3 செக்கன்
(3) 2 நிமிடம் 4 செக்கன்
(4) 2 நிமிடம் 6 செக்கன்

**07 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தெரிந்தெடுக்குக.**

குறித்த சதுரமுகி ஒன்றின் ஆறு பக்கங்களிலும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வெவ்வேறு நிறங்கள் பூசப்பட்டுள்ளன.
* நீலப் பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் கறுப்புப் பக்கம் உள்ளது.
* வெள்ளைப் பக்கம் சிவப்புப் பக்கத்திற்கும், பச்சைப் பக்கத்திற்கும் அடுத்து உள்ளது.
* நீலப் பக்கம் மஞ்சள் பக்கத்தை அடுத்து உள்ளது.
* கறுப்புப்பக்கம், பச்சைப் பக்கத்தை அடுத்துள்ளது.
* சிவப்புப் பக்கம் மேலே உள்ளது.

07. வெள்ளைப் பக்கத்திற்கு எதிரே இருக்கும் பக்கத்தின் நிறம் யாது?
(1) நீலம் (2) சிவப்பு (3) பச்சை (4) மஞ்சள்

08. பச்சைப் பக்கத்தை அடுத்துள்ள நான்கு பக்கங்களினதும் நிறங்கள் யாவை?
(1) நீலம், மஞ்சள், கறுப்பு, சிவப்பு.
(2) நீலம், கறுப்பு, சிவப்பு, வெள்ளை.
(3) மஞ்சள், கறுப்பு, சிவப்பு, வெள்ளை.
(4) நீலம், மஞ்சள், கறுப்பு, வெள்ளை.

09. அடிப்பக்கத்தின் நிறம் யாது?
(1) வெள்ளை (2) பச்சை
(3) கறுப்பு (4) மஞ்சள்.

**10 தொடக்கம் 12 வரையுள்ள் வினாக்கள் ஒவ்வொன்றிலும் S, R என்னும் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.**

* S, R ஆகிய இரு கூற்றுக்களும் திருத்தமானவையாகவும், கூற்று R ஆனது கூற்று S இற்கான திருத்தமான விளக்கமாகவும் இருப்பின், எழுத்து A யையும்,
* S, R ஆகிய இரு கூற்றுக்களும் திருத்தமானவையாகவும், கூற்று R ஆனது கூற்று S இற்கான திருத்தமான விளக்கமாக அமையாமலும் இருப்பின், எழுத்து B யையும்,
* கூற்று S திருத்தமாகவும், R திருத்தமற்றும் இருப்பின் எழுத்து C யையும்,
* கூற்று S திருத்தமற்றும், கூற்று R திருத்தமாகவும் இருப்பின் எழுத்து D யையும்,
* S, R ஆகிய இரு கூற்றுக்களும் திருத்தமற்று இருப்பின், எழுத்து E யையும் தெரிவுசெயக.

10. S: வானொலி - தொலைக்காட்சியைக் காட்டிலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.
R: வானொலி ஒப்பீட்டளவில் தொலைக் காட்சியைக் காட்டிலும் மலிவானது.
(1) A (2) B (3) C (4) D

11. S: புகையிரதத்தில் செல்லல், பேரூந்தில் செல்லலிலும் விரைவாக இருக்கலாம்.
R: புகையிரதத்தின் சராசரிக்கதி எப்போதும் 60 Km/ மணித்தியாலத்தைக் காட்டிலும் கூடியது.
(1) A (2) B (3) C (4) D

12. S: இளைஞர்கள் பயங்கர நோய்களால் தாக்கப்படும் சாத்தியக்கூறு அதிகமாகும்.
R: இளைஞர்கள் தமது உணவையும், வாழ்க்கைப் பாணியையும் பற்றி கவனமாக இருப்பதில்லை.
(1) A (2) B (3) D (4) E

**13 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றலும், தொடக்கத்தில் ஒரு முடிவு தரப்பட்டுள்ளது. அம்முடிவை நிறுவும் கூற்றைத் தெரிவுசெய்க.**

13. முடிவு : பாடநூல்களைத் தக்கவேளையில் நிகழ்நிலைப்படுத்தவேண்டும்.
**கூற்றுக்கள்**
(1) பழைய விடயங்களைக் கற்பதற்கு மாணவர்களுக்கு விருப்பமில்லை.
(2) பரீட்சை - புதிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(3) அறிவு தொடர்ச்சியாகச் சேர்கின்றது.
(4) ஆசிரியர்கள் புதிய பாடவிடயங்களை மாத்திரம் கற்பிக்கவேண்டும்.

14. முடிவு: தாய் சமைக்கத்தக்கவராக இருத்தல் வேண்டும்.
**கூற்றுக்கள்**
(1) ஆண்கள் சமைக்கக்கூடியவர்கள் அல்லர்.
(2) தாய்மார் சமைக்கும் உணவைப் பிள்ளைகள் உண்ண விரும்புவர்.
(3) குடும்பத்திற்கு உணவளித்தல் தாயிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.
(4) சமைத்தல் தாய்மாரின் கடமையாகும்.

15. முடிவு : சமைப்பதற்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் எரிபொருள் விறகாகும்.
**கூற்றுக்கள்**
(1) விறகு- ஏனைய வகை எரிபொருட்களைப் போலன்றி, அதிகளவு வெப்பத்தைத் தருகின்றது.
(2) மிகவும் கிடைக்கத்தக்க எரிபொருள் விறகாகும்.
(3) விறகைப் பயன்படுத்தல் பாரம்பரிய வழக்கமாகும்.
(4) விறகு வழங்கல்- சிலர் வருமானத்தை உழைக்கும் ஒரு வழிவகையாகும்.

**16 தொடக்கம் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு சொற்களில், ஒன்று மற்றைய சொற்களுடன் பொருந்துவதில்லை. அதனைத் தெரிவுசெய்க.**

16. (1) கரும்பு (2) அரும்பு
(3) பரப்பு (4) திருமபு
17. (1) காலி (2) களுத்துறை
(3) அம்பாந்தோட்டை (4) மாத்தறை
18. (1) கவலை (2) மகிழ்ச்சி
(3) பயம் (4) அதிர்ச்சி

**19 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தெரிவுசெய்க.**

19. லதா லீலாவின் சகோதரி, லீலா ஜெயந்தியின் மகள், பாபு லீலாவின் தந்தை. லதா பாபுவுக்கு என்ன முறையானவர்?
(1) மருமகள் (2) சகோதரி
(3) மைத்துனி (4) மகள்

20. தண்டனை : மறியல்
(1) தீர்ப்பு : நீதிவழங்கல்
(2) தவறு இழைத்தல் : குற்றம்
(3) யூரி : நீதிபதி
(4) பணம் : சுற்றுமாற்று

**21 தொடக்கம் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட சொற்களின் இரகசிய மொழி- ஆங்கில சிறிய எழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. ஆனால், இரகசிய மொழிச் சொற்கள் ஒழுங்கின்றி உள்ளன. ஒவ்வொரு பெரிய ஆங்கிலச் சொல்லிலும் கோடிடப்பட்ட எழுத்திற்குப் பொருத்தமான ஆங்கில சிறிய எழுத்தின் கீழ் கோடிடுக.**


21. BOARD - n e c a m
22. STAND - e c f q o
23. RIVER - g n k n s

**24 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களின் கோலங்களில், ஆங்கில எழுத்துக்களில் இடப்பட வேண்டிய எண்களைத் தருக.**


24.

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 3 | 5 |
| 4 | 2 | 6 | 1 |
| 3 | 6 | 1 | 7 |
| 2 | 4 | 4 | A |

(1) 5
(2) 4
(3) 3
(4) 2


25.



(1) 48 (2) 54 (3) 72 (4) 96


26.



(1) 12 (2) 13 (3) 20 (4) 17


**27 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் உருக்களை அடிப்படையாகக் கொண்டனவாகும்.**

27. பின்வரும் நான்கு உருக்களிலும் எந்த உரு ஏனைய மூன்று உருக்களிலும் வேறுபட்டது.



(1) (2) (3) (4)

28. அடுத்து வரும் உருவைத் தெரிவுசெய்க.



(1) (2) (3) (4)

29. பின்வரும் மாதிரி உருவை மடித்து அமைக்கக்கூடிய கனவுரு யாது?



(1) (2) (3) (4)

30. பின்வரும் கோலத்தில் 8 ஆம் கோலத்தில் வரவேண்டிய குற்றுகளின் எண்ணிக்கை யாது?


(1) 32 (2) 28 (3) 64 (4) 40

31. கீழ்த்தரப்பட்ட உருக்களில் முக்கோணியில் காட்டப்பட்டது போன்று, மூன்று சமச்சீர் அச்சுக்களைக்கொண்ட உரு யாது?


(1) (2) (3) (4) (5)

32. பின்வரும் உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன.


(1) 16 (2) 14 (3) 11 (4) 12

**33 தொடக்கம் 37 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

33. விளையாட்டுச் சைக்கிள் ஒன்று இரு அளவுகளிலான சில்லுகளை உடையது. முன்சில்லு பின்சில்லிலும் சிறியது. முன் சில்லின் பரிதி 88 cm உம், பின் சில்லின் பரிதி 132 cm உம் ஆகும். இரு ரயர் வால்வுகளும், சில்லின் அடியில் இருக்கும்போது, சிறுவன் ஒருவன் சைக்கிளைத் தள்ளத் தொடங்குகிறான். இரு வால்வுகளும் மறுபடியும் சில்லுகளின் அடியில் இருப்பதற்கு, சிறிய சில்லு எத்தனை சுற்றுத் திரும்பியிருக்கும்?

..............................................

34. நகரில் வாடகைக் கார் கட்டணம் - முதல் 10 km இற்கு ரூபா 22.50 உம், பயணத்தின் எஞ்சிய பகுதிக்காக km இற்கு ரூபா 17.50 உம் ஆகும். ஒரு நாள் இரவில் நான். எனது மூன்று நண்பர்களுடன் ஒரு வாடகைக்காரில் வீட்டுககு வந்தேன். நாம் காரின் வாடகையைப் பகிர்ந்துகொண்டோம். எனது பங்கு ரூபா 82.50 ஆகும். எமது பயணத்தின் தூரம் யாது?

..............................................


35. நவீனசந்தை ஒன்றில் ஒரு kg அரிசியின் விலை ரூபா 24 உம், ஒரு kg உருளைக்கிழங்கின் விலை ரூபா 60 உம் ஆகும். ஞாயிறு சந்தையில் ஒரு kg அரிசியின் விலை ரூபா 20 உம், ஒரு kg உருளைக்கிழங்கின் விலை ரூபா 56 உம் ஆகும். ஒருவர் நவீனசந்தையில் 3 kg அரிசியையும் 2 kg உருளைக்கிழங்கையும் வாங்கக் கொடுக்கவேண்டிய பணத்திற்கு ஞாயிறு சந்தையில் 4 kg அரிசியுடன் எத்தனை kg உருளைக்கிழங்கை வாங்கலாம்?

..............................................

36. களியாட்டவிழா ஒன்றிலே இராட்டினம் ஒனறு பி.ப. 2 மணி தொடக்கம், அடுத்தநாள் மதியம் 1 மணி வரைக்கும் செயற்படுகின்றது. இராட்டினத்தில் ஒரு சவாரிக்கு 6 நிமிடம் எடுக்கிறது. ஒரு சவாரிக்கிடையே ஆட்களை இறக்குவதற்கும், மீண்டும் ஏற்றுவதற்கும் 12 நிமிடம் எடுக்கின்றது. ஒரு சவாரியின் தொடக்கத்திற்கும் மீள ஏற்றலுக்கும் இடையே 2 நிமிட இடைவேளையும், ஒரு சவாரியின் இறுதிக்கும், இறக்கலுக்கும் இடையே 2 நிமிட இடைவேளையும் உள்ளன. ஒரு நாளில் உயர்ந்தபட்சம் எத்தனை சவாரிகள் நடைபெறலாம்?..............

37. அலுவலகம் ஒன்றில் நடைபெற்ற நலன்புரிச் சங்கத்தின் புத்தாண்டு விழாவிற்கு, மூன்று அதிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். அவ்விழா நடைபெற்ற மண்டபத்தில் முதல் வரிசையில் பத்து ஆசனங்கள் இருந்தன. மூன்று அதிதிகளும் முதல் நிரையில் இருததல்வேண்டும் எனவும், அவர்களின் இடப்பக்கத்தில் குறைந்தபட்சம் நான்கு வேறு ஆட்களும் இருத்தல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய மூன்று அதிதிகளுக்கும் எத்தனை விதங்களில் ஆசனங்களைக் குறித்து ஒதுக்கலாம்.

**38 தொடக்கம் 40 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொணடனவாகும்.**
25 பிள்ளைகளைக்கொண்ட ஒரு மாதிரியின் வயதும், நிறையும் இவ்வரைபில் குற்றுக்களினால் காட்டப்பட்டுள்ளன.





38. வரைபுக்கு ஏற்ப 49 kg இற்கு மேற்பட்ட நிரையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை
(1) 3 (2) 4 (3) 5 (4) 6


39. 17 வயதிற்குக் குறைந்தவர்களும் 43 kg இற்கு மேற்பட்ட நிறையுள்ளவர்களுமான பிள்ளைகளின் சதவீதம்.
(1) 32% (2) 36% (3) 40% (4) 44%

40. 16 வயதிற்குக் குறைந்தவர்களும், 49 kg இற்கு குறைந்த நிறையுள்ளவர்களுமான பிள்ளைகளின் சதவீதம்.
(1) 30% (2) 32% (3) 20% (4) 40%


**41 ஆம் 42 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றும் பல மரக்குற்றிகளிலான ஒரு சேர்த்தித் திண்மத்தை அடிப்படையாகக் கொண்டவை. இத்திண்மத்தின் இரு தோற்றங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.**

41.


வெவ்வேறு திசைகளில் இருந்த பார்க்கும்போது, இக்குற்றியின் திருத்தமான, முனைவுத் தோற்றத்தைத் தரப்பட்டுள்ள தோற்றங்களிலிருந்து தெரிந்தெடுத்து அத்னைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தருக.


42.



(1) (2) (3) (4)


43.


(1) (2) (3) (4)

**43 ஆம் 44 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றும் பினவரும் வரைபடத்தை அடிப்படையாக் கொண்டன. ஒரு தடவையில் இருவர் மாத்திரம் ஆடத்தக்க விளையாட்டு இவ்வரைபடத்தில் காணப்படுகிறது. ஓர் ஆட்டக்காரர் இலக்கங்களைக் கொண்ட ஒரு சதுரத்தை நிலத்தில் வைப்பதன் மூலம் விளையாட்டை ஆரம்பிக்கிறார். அடுத்த ஆட்டக்காரர் 1 ஆம் ஆட்டக்காரரால் நிலத்தில் வைக்கப்பட்ட சதுரத்திலுள்ள இலக்கங்களில் கோலத்தை விளக்கிக் கொண்டு, அடுத்து வைக்கப்படவேண்டிய சதுரத்தின் இலக்கத்தை நான்கு விடைகளில் இருந்து தெரிவு செய்க.**




43.



44.



P.உமாசங்கர் Bcom.spl .Tr .com
ஆசிரியர்
பொது அறிவு நுண்ணறிவுத்துறை.

## இந்தியாவின் மகாராஷ்டிராவில்

# கும்பமேளா விழா நெரிசலில் 39 பக்தர்கள் நசுங்கிப் பலி!




(மும்பாய்)

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் வடபகுதியில் அமைந்துள்ள, இந்து ஆலயமொன்றில் நடைபெற்ற திரு விழாவில் ஏற்பட்ட சன நெரிசலில் அகப்பட்டு 39 பக்தர்கள் கொல்லப்பட்டனர்.

கும்பமேளா என்றழைக்கப்படும் இந்தத் திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்கள் கோதாவாரி நதியில் நீராடு வதை புனிதமான ஒரு நிகழ்வாகக் கருதுவார்கள்.

ஒடுங்கிய பாதைவழியாக கட்டுப்பாடின்றி மக்கள் செல்ல முற்பட்டதாலேயே இந்த மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை - துறவி ஒருவர் பணத்தை கைவிட்டு எறிந்தபோது அதை எடுக்கமுண்டியடித்தபோதே இவ்விபத்து நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் இந்தத் திருவிழாவில் ஒவ்வொரு முறையும் பல மில்லி யன் மக்கள் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.



பொஸ்னியாவில் சேர்பியா என்ற இடத்தில் கடந்த 1992 இருந்து 1995 வரையான காலப்பகுதியில் சேர்பியர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் மண்டையோடுகள் தடயவியல் அறிஞர்களால் பரிசோதிப்பதற்காக குவித்துவைக்கப்பட்டிருக்கும் காட்சி.

## நியுயோர்க் நகரில்

# சோறு போடாத மாமியாரை வெட்டிக் கொன்ற மருமகன்!

(நியுயோர்க்)

தனக்குச் சோறுபோட மறுத்ததாக மாமியாரை மருமகன் வெட்டிக் கொன்ற சம்பவம் ஒன்று நியுயோர்க் நகரில் நடைபெற்றது.

வங்கதேசப் பிரஜையான ஆயிஷா அக்தர் சம்பவத்தன்று தனக்குச் சோறுபோடும்படி மாமியார் பரீதா பேகத்திடம் கேட்டபோது -

ஏற்கனவே உடல் பருமனாக இருக்கும் உனக்கு மேலும் அரிசிச் சோறு சாப்பிட்டால் எடைகூடும் என்று கூறி மறுத்திருக்கிறார் மாமியார்.

ஆத்திரமடைந்த மருமகன், வீட்டில் இறைச்சி வெட்டும் கத்தியால் மாமியாரின் தலை, கை, தோள்பட்டை ,ஆகியவற்றில் வெட்டினார்.

மண்டை பிளந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாமியார், அங்கு உயிரிழந்தார்.



பலஸ்தீனத்தின் நப்லஸ் நகருக்குள் முன்னேறிச் செல்வதற்காக, கவசவானம் ஒன்றின் பின்னால் இஸ்ரேல் படைவீரர் ஒருவர் தயார் நிலையில் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# போர் நிறுத்தத்திற்கு முன்வருமாறு போராளிகளுக்கு அரபாத் அழைப்பு

(காஸா)



பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் இஸ்லாமிய தீவிரவா திகளை மீண்டும் ஒருமுறை போர்நிறுத்தமொன்றைச் செயற் படுத்த முன்வருமாறு நேற்றுக் கேட்டுக்கொண்டார்.

ஹமாஸ் இயக்கத் தலை வர் ஒருவர் சென்றவாரம் படு கொலைசெய்யப்பட்டபின்னர் தீவிரவாதிகள் மீண்டும் போரை ஆரம்பித்து இருந்தார்கள். பலஸ் தீன பிரதமர் அபாசை போர் நிறுத்தம் ஒன்றை ஆரம்பிப் பதற்கு பேச்சுவார்த்தையைத் தொடங்குமாறு கேட்டுள்ளதாக தெரிவித்தார்.

அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட சர்வதேச சமாதான நடவடிக்கை தொடர்வதற்கு முயற்சி செய்யுமாறும் அரபாத் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேல் எறிகணைத் தாக்குதல்களையும், இஸ்லாமிய தீவிரவாதிகளை தேடி அழிக்கும் செயற்பாடுகளையும் நிறுத்தினால் - தீவிரவாதிகளை தான் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்வதாக யஸீர் அரபாத் மேலும் தெரிவித்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் அமெரிக்கா, பலஸ்தீன பிரதமரின் கருத் துக்களை அரபாத் செயல்படுத்த முன்வர வில்லை என குற்றஞ்சாட்டி யுள்ளது.

# மும்பாய் குண்டுவெடிப்பு சம்பவம்; சந்தேக நபருக்கு வலைவீச்சு!

மும்பை குண்டுவெடிப்புச் சம்ப வம் தொடர்பாக, சந்தேகத்திற்கிட மான மர்மப் பெண்ணையும் வேறொ ருவரையும் பொலிஸார் தேடிவரு கின்றனர்.

அவர்கள் இருவரும் பயணம் செய்த வாகனத்திலேயே குண்டு வைக் கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத் திலேயே அவர்கள் தேடப்பட்டுவரு கின்றனர். அவர்கள் பயணம் செய்த வாகனச் சாரதியிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் இது தெரியவந்துள்ளது.

இதேவேளை - மும்பாய் புற நகர்ப்பகுதியில் சந்தேகத்திற்கிட மான மூன்றுபேரை பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குண்டுவெடிப்புச் சம்பவங்களில், 'லஷ்கர் இ தொய்பா' இயக்கத்தினர்



பெண் தீவிரவாதிகளை ஈடுபடுத்தி வருவதாக மும்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கான விசா ரணையில் மூன்று பொலிஸ் பிரிவு கள் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளன.

'லஷ்கர் இ தொய்பா' அமைப்பு பெண்களை தற்கொலைத் தாக்குத லுக்குப் பயன்படுத்தாமல், குண்டு களை வைப்பதற்கு மட்டுமே பயன் படுத்துகின்றார்கள் எனவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை மும்பை கார் குண்டுவெடிப்பில் இறந்தோர் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள் ளது. இதில் 7 பேர் குஜராத்திலி ருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஶ்ரீநகரில் சிப்பாய் சுட்டுக் கொலை!

ஶ்ரீநகரின் பிரதான பகுதியான லால் சௌக்கில் படைவீரர் ஒருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப் பட்டார்.

பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி உள்ளிட்ட முக் கிய பிரமுகர்களின் வருகையை யொட்டி பலத்த பாதுகாப்பு ஏற் பாடுகள் நடைபெற்றுக்கொண்டி ருந்தபோதே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்துக்கு ஜெயஸ் - இ-முகம்மது என்ற தீவிரவாத அமைப்பு, பெறுப்பேற்பதாக செய்தி நிறுவன மொன்றுக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## உலகவலம்

### நேபாளத்தில் போர்நிறுத்தம் முறிவடையும் நிலையில்!

நேபாளத்தில், கிளர்ச்சியாளர்க ளுக்கும் அரசுக்குமிடையில் பேணப்பட்டு வந்த போர்நிறுத்தம் முறிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசு தமது கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டதாக தீவிரவாத இயக்கத்தின் தலைவர் 'பரசந்திரா' தெரிவித்ததைத் தொடர்ந்து போர் நிறுத்தம் முறியும் நிலை தோன்றியுள் ளது.

ஆயுதங்களைத் தீவிரவாதிகள் அகற்ற வேண்டும் எனவும், தற்போது உள்ள அரசியலமைப்பின்படியே பேச் சுக்களைத் தொடரவேண்டும் என அரசு நிர்ப்பந்தித்தால், போர்நிறுத் தத்தை தொடர்ந்து பேணப்போவ தில்லை என தீவிரவாதிகள் தெரி வித்துள்ளனர்.

# மகன் கொடுத்த ரத்தத்தால் தாய்க்கு எச்.ஐ.வி.வைரஸ்!

அறுவைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்திருந்த தாய்க்கு இரத்தம் தேவைப்பட்டபோது, அவரது மகன் அளித்த ரத்தம் மூலமாக தாய்க்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் பர்த்வான் மருத்துவமனையில் ஒரு பெண்ணுக்கு 2 ஆண்டுகளுக்கு முன் அறுவைச் சிகிச்சை நடந்தது. அவருக்குத் தேவையான ரத்தத்தை அவரது மகனே கொடுத்தார்.

அவரது ரத்தத்தைச் சோதிக்காமல் தாய்க்கு ரத்தம் ஏற்றப்பட்டது. ஆனால், மகனுக்கு எச்.ஐ.வி.நோய் இருந்தது பின்னரே தெரியவந்தது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் உடல் நலம் குன்றி மகன் இறந்தார். இப்போது அவரது தாய் எச்.ஐ.வி.நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.


இரத்தத்தைச் சோதிக்காமல் தனக்கு ஏற்றிய மருத்துவமனை நிர்வாகத்தை எதிர்த்து அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

# இருவேறு தாக்குதல்களில் 2 அமெரிக்க படையினர் பலி!

ஈராக்கின் இருவேறு இடங்களில் சதாம் ஆதரவுப் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களில், இரண்டு அமெரிக்கப் படையினர் கொல் லப்பட்டுள்ளார்கள். ஒருவர் பக்தாத்திலும், மற்றவர் 'பலூஜா'என்ற நகரிலும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் மீதான போர் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 64 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக சதாம் ஆதரவுப் படைகள் - அமெரிக்க, பிரிட் டிஷ் படையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்களால் அவர்கள் ஈராக்கில் நெருக்கடிநிலையை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நகரில் இருந்து ஜெருசலேம் பகுதிக்குச் செல்வதற்காக பலஸ்தீன சிறுவன் ஒருவன் சுவர் ஏறிக்குதிக்கும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பேசாலை அகதிமுகாமை அகற்றுமாறு பொதுமக்கள் அமைதிப் போராட்டம்!

## இரண்டாயிரம் பேர் கலந்துகொண்டனர்

மன்னார் பேசாலையிலுள்ள அகதி முகாமினை அகற்றக்கோரி, மக்கள் அமைதிப் போராட்டம் ஒன்றினை முகாம் முன்பாக நடத்தியுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று - காலை பத்துமணிக்கு இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்த அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1990 ஆம் ஆண்டு அகதி முகாம் ஆரம்பிக்கப்பட்டு, 13 வருடங்களாகிவிட்டது. இந்த முகாமினால் எமது கிராமத்தின் தனித்துவப் பண்புகள், கலை பண்பாடுகள் என்பன அழிந்துவிட்டன.

இருப்பினும் கடந்தகால போர்ச்சூழல் காரணமாக, மக்கள் இடம்பெயர்ந்து வந்ததால் இந்தப் பகுதியில் முகாம் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக இந்த முகாமிற்குள் - போதைப்பொருள் வியாபாரம், கஞ்சா, கசிப்பு வியாபாரம் மற்றும் பல சமூகச் சீர்கேடுகள் என்பன நடைபெற்று வருகின்றன. இது எமது கிராமத்தைப் பாதிக்கின்றது. இந்த முகாமினை அகற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக, இந்த அமைதிப் போராட்டத்தினை நடத்துகின்றோம் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (201)

# வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்வதன் மூலம் தமிழரின் அபிலாஷைகளுக்கு திருப்தியான தீர்வு கிடைக்குமெனில் நாம் தடையில்லை!

## தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப்

"வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்வதன்மூலம்தான் தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் திருப்தியான தீர்வு கிடைக்குமென்றால், அவர்களது அபிலாஷைக்குத் தடையாக இருக்க நாம் விரும்பவில்லை. ஆனால், சமமான பிரஜைகளான முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் மறந்துவிட முடியாது."

-இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணி கட்சித் தலைவியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப், நேற்று அம்பாறையில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

"கிழக்கைப் பிரிக்கவேண்டுமென்ற அமைப்புக்குள் உட்பட்டு நான் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ள வரவில்லை.

ஆனால், வட-கிழக்கில் தனியான இடைக்கால நிர்வாகம் தனியொரு இயக்கத்திற்கு, வழங்கப்படுவதை எதிர்க்கும் நிலைப்பாட்டிலேயே இதில் கலந்துகொள்கிறேன்.

இது கிழக்கைப் பாதுகாக்கும் இயக்கமாக, இன்று வெளிப்பட்டுள்ளது. அவ்வாறானால் நாட்டின் ஏனைய பகுதிகளைப் பாதுகாப்பது யார் எனக் கேட்கவிரும்புகிறேன்.

அவ்வாறானால், வடக்கை எவரிடமும் பாரம்கொடுத்துவிட்டார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

என்னைப் பொறுத்தவரை, நாட்டைப் பாதுகாக்கும் மக்களாக நாமிருக்கவேண்டும். நாட்டுப்பற்றுள்ள சமூக மக்களாக நாம் மாறவேண்டிய நிலைமை இன்று வந்துள்ளது.

1933 ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்கள், இலங்கையர் என்ற உணர்வு ஏற்படாதவண்ணம் மக்களைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்தனர்.

இவ்வாறு பிரித்துப் பிரித்துப் போட்ட கோடுகள் இன்னும் வியாபித்தேவருகின்றன. இந்த பிரித்த கோடுகள் எமக்குத் தேவையில்லை. கிழக்கைப் பிரிக்கவேண்டுமென்று கேட்பதால் இன்றுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியுமா? அவ்வாறு பிரிப்பதால் நாம் எதிர்பார்க்கும் தீர்வதன் என்ன?

சர்வதேசத்தில் தமிழ் மக்களுக்கு அநியாயங்கள் நடந்துள்ளன. அதற்கு நியாயம் தேட வேண்டியுமுள்ளது. அதற்கு நாம் ஆதரவளிக்கவேண்டும், முன்னுரிமை கொடுக்கவேண்டும். தமிழ் மக்களுடையபோராட்டம் மக்களின் போராட்டம். அந்தப் போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கு இணைந்திருப்பதானதே தீர்வுகாணமுடியுமென்றால், அதற்கு ஆதரவு வழங்க நாம் தயாராக இருக்கவேண்டும்.

வட-கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களை எவ்விதத்திலும் புறக்கணித்துவிடவோ, மறந்துவிடவோ கூடாது.

எல்லோரும் சமமான பிரஜைகள் என்ற நிலையில் நாம் எதை எதிர்பார்க்கின்றோமோ, அதை ஏனையவர்களுக்கும் கொடுக்கும் மனப்பக்குவம் வரவேண்டும்.

தங்களுக்காக, வட-கிழக்கில் தனியான நிர்வாகத்தை அமைக்க வேண்டுமெனத் தமிழர்கள் விரும்பும்பொழுது, முஸ்லிம், சிங்கள மக்களுக்கும் அதேநிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்பட்டதான் வேண்டுமென்ற மனத் தன்மை தமிழர்களுக்கு இருக்கவேண்டும்.

தமிழர்கள் தாம் அனுபவித்த கஷ்டங்களை மற்றவர்கள் அனுபவிக்கக்கூடாது என்பதை முதன்மைப்படுத்தி உணரவேண்டும்.

நாட்டைக் கூறுபோடாமல் இருக்கும் நிர்வாக அமைப்பினை, அதிகாரத்தைப் பரவலாக்கும் தீர்வுத் திட்டத்தையே நாம் கேட்கின்றோம். அந்த அதிகாரத்தை ஒரு இயக்கத்துக்கு வழங்காமல்- தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களுக்கு பரவலாக்க வேண்டும் இவ்வாறு அவர் மேலும் கெரிவித்தார்.(07)

# வடக்கு—கிழக்கைப் பிரிக்கக்கோரி அம்பாறையில் நேற்று ஆர்ப்பாட்டம்!

வடக்கு - கிழக்கை உடனடியாகப் பிரிக்கக் கோரியும், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கூடாதெனக் கோரியும், அம்பாறை நகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

கிழக்கைப் பாதுகாக்கும் அமைப்பு என்ற பெயரில், இந்தக் கண்டனப் பேரணிக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அம்பாறை பிரௌண் சந்தியில் ஆம்பமான இப்பேரணி, அம்பாறை நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை வந்தடைந்து அங்கு கண்டனப் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் - தேசிய ஐக்கிய முன்னணித் தலைவியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப்; முன்னாள் பிரதி அமைச்சர் எச்.எம்.வீரசிங்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரீ.ஏ.கே. தேவாரப்பெரும, விமலவீர திஸநாயக்க, உட்படப் பெருமளவு பௌத்த பிக்குகளும் சிங்களவர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டோர் அரசிற்கும், புலிகளுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், வடக்கு-கிழக்கைப் பிரிக்கவேண்டுமெனவும், இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்கக் கூடாதெனவும் தெரிவித்தனர். அத்துடன் இவை தொடர்பான பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்துகொள்ளுமாறு முஸ்லிம் பிரதேசங்களில் சுவரொட்டிகள் ஒட்டியும், துண்டுப்பிரசுரம் மூலம் கோரப்பட்டபோதிலும், விரல்விட்டு எண்ணக்கூடிய சிறிதளவான முஸ்லிம்களே கலந்துகொண்டனர்.

காலைவேளை - வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தபோதிலும், மாலை அம்பாறை நகரம் வழமைக்குத் திரும்பியது. (07)

## இடைக்கால...

இடைக்கால நிர்வாகசபை தீர்வு குறித்து இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டும் என சிலர் வலியுறுத்தி வருகின்றனர் எனக் தெரிவித்த அவர், தற்போது இந்த விடயம் குறித்து இந்தியாவுடன் ஆராய்ந்து வருவதாகவும் கூறினார்.

யுத்தம் நீங்கி, அச்சுறுத்தல் நீங்கி இயல்பான சூழ்நிலை ஏற்படக்கூடிய தீர்வொன்றே - இலங்கையில் காணப்படவேண்டும் என, முழு உலகும் விரும்புவதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர், அவ்வாறான ஒரு தீர்வைக் காணும்போது - இந்தியாவை கலந்தாலோசிக்க அரசு தயங்காது எனவும் குறிப்பிட்டார்.

## அதிகாரங்களை...

நாட்டின் எதிர்கால பாதுகாப்புக் கருதி, தமது பொறுப்பை ஜனாதிபதி எடுக்கவேண்டும். பாதுகாப்பு படைகளின் கட்டுப்படுத்தும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் கையில் எடுத்து- சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பாற்ற ஜனாதிபதி முன்வரவேண்டும்.

- இவ்வாறு தேசிய சங்க சம்மேளனத்தின் சார்பில், பிக்குமார் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திகதி நீடிப்பு

யாழ்.குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் நிலவும் சிற்றூழியர்களுக்கான பதிலாட்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்ப முடிவத் திகதி எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்,

பதிலாட்களை தெரிவுசெய்வதற்கான விண்ணப்பத் திகதி கடந்த 25 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

# தமிழகத்திலிருந்து திரும்பிய 10 பேர் மன்னாரில் கைது!

(மன்னாா)

மன்னார் - ஊருமலை பஸ் நிலையத்தில், சந்தேகத்துக்கிடமாக நடமாடிய பத்துப்பேரை கடற்படையினர் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கடற்படையினர் நடத்திய விசாரணைகளின் போது இவர்கள் இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரியவந்தது.

இவர்கள், ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபா கொடுத்து இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு திரும்பியுள்ளனர். இவர்களனைவரும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## உறக்கத்திலிருந்த...

அந்தப் பெண்ணுடன் தகாத நடத்தையில் ஈடுபடமுற்பட்டவேளை - அப்பெண், அவரைத் தாக்கினார். தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிப்பாய், ஓட முற்பட்டவேளை- அவரை துரத்தித்துரத்தித் தாக்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, தகவலறிந்த அந்தப் பகுதி இளைஞர்குழு, சம்பந்தப்பட்ட சிப்பாயை மடக்கிப் பிடித்துத் தாக்கியது. இவர்களிடமிருந்து தப்பிய சிப்பாய், கரையோரப் பகுதியிலிருந்த காவலரணுக்குள் தப்பியோடினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, 524 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரிக்கு முறையிடப்பட்டது. இதனையடுத்து - சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற படையதிகாரிகள், விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக - பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், கரையோரப் பகுதியிலிருந்த காவலரணில், காவல் கடமையில் ஈடுபட்ட மூன்று இராணுவச் சிப்பாய்களை, இராணுவப் பொலிஸார் கைதுசெய்து, விசாரணைக் குட்படுத்தினர்.

இந்தச் சம்வத்தையடுத்து, அந்தப் பகுதி பெண்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (202)

## ஜே.வி.பி...

விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்க உரையாற்றினார்.

இந்த எதிர்ப்புப் பாதயாத்திரை இன்று பிற்பகல் கொழும்பு லிப்டன் சந்தியில் முடிவடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழ், முஸ்லிம் எம்.பிகள்...

எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அலரி மாளிகையில் நடந்த சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை - கிழக்கின் நிலைமைகள் தொடர்பாக மீளாய்வு செய்யும் மற்றுமொரு உயர்மட்ட சந்திப்பு, எதிர்வரும் 8 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும்.

பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த விசேட சந்திப்பில் - அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் - தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வீ.ஆனந்தசங்கரி உட்பட வடக்கு-கிழக்கின் தமிழ் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

## புலிகள் முன்வைக்கும்...

முன்வைக்க இருக்கும் தீர்வு ஏற்றுக்கொள்ளப்படுமா, ஏற்றுக்கொள்ளப்படாதா என்பது வேறு.

ஆனால், சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைபாக அது இருக்கும் எனவும் தெரிவித்தார். இனவாத அரசியலில் புதைந்துள்ள சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்பார்களா? என்பது அவர்களைப் பொறுத்தது. மக்கள் மயப்பட்ட எமது போராட்டம் எப்போதும் தோல்வியைக் காணாது. புதிய வரலாற்றைப் படைத்தே தீரும்.

எமது மக்களின் விடுதலைக்காக போராடும் எமது அமைப்பு, இன்னொரு சிறுபான்மை இனத்தை அடக்கி ஒடுக்க ஒருபோதும் முனையாது. வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள், தெற்கிலுள்ள முஸ்லிம் தலைமைத்துவத்தை விரும்புகிறார்கள் இல்லை.

சந்திரிகா இத்தகைய சமூகப் பிளவை ஏற்படுத்தி அரசியல் இலாபமடைய முற்படுகிறார். வடக்கு - கிழக்கை இணைக்கமுடியாதெனவும், அது இறுதித் தீர்வாகாது எனவும் சர்வதேச சமூகத்தை நம்பவைக்க அவர் அப்படி நடந்துகொள்கின்றார் என்றும் கேணல் கருணா மேலும் தெரிவித்தார்.

## நிரந்தரமான தீர்வு...

தனிநாட்டுக்கான அடித்தளம் நிறுவப்போகிறார்களோ என்று, சர்வதேச சமூகத்தை ஏமாற்றி - உண்மையை மறைத்து, உலக சமூகத்தின் முன் எம்மை வன்முறையாளர்களாகக் காட்டிவந்த சிங்கள அரசு, இன்று செய்வதறியாது திகைத்து நிற்கின்றது.

17,690 வரையான மாவீரர்கள் எங்கள் மனக்கண்களில் நிற்கிறார்கள். எண்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களை நெஞ்சில் நிறுத்தி வரலாறு கூறுகின்றது. அது வழிகாட்டியாக நிற்கின்றது. மாபெரும் தலைவன் எங்களை நடத்துகின்றார். சொந்த மண்ணில் கௌரவத்தோடும் , நிமிர்வோடும் வாழ்வோம்.

புலம்பெயர்ந்த மக்களாகிய நீங்கள் கடன்கொடுத்தவர்கள். இந்த வளர்ச்சிக்கு நீங்களும் பங்காற்றியுள்ளீர்கள். எனவே, நாங்கள் நிறைய நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்தார்.

### வாசகர்கள் கவனத்திற்கு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்காக இன்று வெளியாகின்ற பொது உளச்சார்பு வினாக்களுக்கான விடைகள் நாளை நமது ஈழநாட்டில் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
LECTURES BY-
MR.M.A.HARI
★ புதிய பிரிவு ஆரம்பம் ★
31.08.2003 ஞாயிறு காலை 8 மணி
SUNDAY / SATURDAY } 8.A.M - 9 A.M
அனுமதிக்கு முந்துங்கள்
DIRECTOR
HARY'S INSTITUTE
இல.564 கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
(சி-1413) யாழ்ப்பாணம்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.05 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.08 | 156.70 |
| 1 யூரோ | 108.99 | 110.68 |
| 1 சுவிஸ் பிராங் | 68.90 | 69.70 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.20 | 61.45 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 23.37 | 23.37 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.